Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 10 ஞாயிற்றுக்கிழமை (26.07.2015) பக்கங்கள் 20 ஓசை – 298

நாடாளுமன்றத் தேர்தல் - 2015



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி

## சர்வதேசமே தீர்வை பெற்றுத்தரும்

### விஞ்ஞாபனத்தில் கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் வாழும் பல்லின மக்களிடையே நிரந்தரமானதும், நிலையானதுமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அனைவரும் சமத்துவமுள்ள குடிமக்களாக வாழ வழி செய்ய சர்வதேச வகிபாகம் தொடர்வது அத்தியாவசியமானது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும் என எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மருதனார்மடத்தில் நேற்று ஆரம்பமாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அதன் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் குறைபாடுகள் உள்ளதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் நலன்சார் பணிகளை முன்னெடுக்க கடந்தகால அரசியற் பலமே காரணம்

### ஈ.பி.டி.பி.யின் முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் எமக்குக் கிடைக்கப்பெற்ற அரசியல் பலம் மற்றும் அரசுடனான நல்லுறவின் ஊடாகவே மக்கள் நலன் சார்ந்த பணிகளை எம்மால் முன்னெடுக்க முடிந்தது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.




உடுவில், சுன்னாகம் பிரதேச செயலகப் பிரிவில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பாக மக்கள் மத்தியில் தற்போது அவநம்பிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜனநாயக போராளிகளை கூட்டமைப்பு நிராகரிப்பது ஏன்?

## உண்மையை புட்டு வைக்கும் முன்னாள் போராளிகள்




(யாழ்ப்பாணம்)

தமது சுயநல அரசியல் பாதிக்கப்பட்டுவிடும் என்பதாலேயே எம்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைப்பதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது என ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் தமது கருத்துக்களை வெளிப்படுத்துகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஜனநாயகமும் இல்லை, ஒற்றுமையும் இல்லை. பெண்களுக்கு சந்தர்ப்பம் இல்லை, இளைஞர்களுக்கு சந்தர்ப்பம்

19 ஆம் பக்கம் பார்க்க

## பால்மாவிற்கான இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான வரியை அரசாங்கம் 45 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

இதற்கேற்ப, இதுவரை ஒரு கிலோ பால்மாவுக்கு அறிவிடப்

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் விதிமுறை மீறலில் வடமாகாண கல்வி அமைச்சர்



(கிளிநொச்சி)

தேர்தல் விதிமுறைகளை மீறும் வகையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் கிளிநொச்சி நகரப் பகுதியில் கூட்டமைப்பினருக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்கள் ஆணையாளரின் அறிவிப்பின்படி அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடக்கூடாதென்பதுடன், பிரசாரமொன்றில் 25 பேருக்கு மேல் செல்லக்கூடாதெனவும் அரச வாகனங்களை பயன்படுத்தக்கூடாதெனவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் இவற்றையெல்லாம் மீறி வடக்கு மாகாண கல்வியமைச்சர் தனது உத்தியோகபூர்வ வாகனத்தை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தியது மட்டுமல்லாது அரச உத்தியோகத்தரான ஆசிரியர் மற்றும் தனியார் கல்வி நிலைய மாணவர்களையும் தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தியுள்ளார்.

அத்துடன் 50 இற்கு மேற்பட்டோர் வர்த்தக நிலையங்கள்,

19 ஆம் பக்கம் பார்க்க

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



டக்ளஸ் தேவானந்தா


உங்களோடு உங்களுக்காக நாங்கள்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி மறுவாழ்வளித்தவர் டக்ளஸ் தேவானந்தா

## கூவில் கிராம மக்கள் தெரிவிப்பு



இடம்பெயர்ந்த எம்மை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி எமக்கு மறுவாழ்வளித்தவர் டக்ளஸ் தேவானந்தர் மட்டுமே என கீரிமலை கூவில் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கீரிமலை கூவில் கிராமத்தில் நேற்றைய தினம்இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்போது, நாங்கள் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக எமது பகுதிகளிலிருந்து 1990 ஆம் ஆண்டு எமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தோம்.

இந்நிலையில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக நாம் திரும்பவும் 2012 ஆம் ஆண்டு எமது சொந்த மண்ணில் மீளக்குடியமரக் கூடிய சூழலொன்றை ஏற்படுத்தி தந்தார்.

அதனடிப்படையில் சொந்த இடங்களில் எம்மை மீளக்குடியமர்த்த வைத்ததுடன் எமக்கு மறுவாழ்வளித்தவரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என மக்கள் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே எமது கிராமத்துக்கான பல தேவைப்பாடுகள் இருக்கின்ற நிலையில் அவற்றுக்கான தீர்வுகளையும் பெற்றுத் தர வேண்டுமென்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனடிப்படையில் கவனம் செலுத்திய செயலாளர் நாயகம் அப்பகுதியில் தும்புத் தொழிற்சாலையொன்றை நிறுவி அதனூடாக வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் வகையில் அதற்கான திட்டமொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் விளக்கினார்.

இதில் ஈ.பி.டி.பியின் வேட்பாளர்களான பசுபதி சீவரத்தினம் ( கி.பி) ஜங்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## தேர்தல் பிரசுரங்களை ஒட்டியவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஐ.தே.க. வின் தேர்தல் பிரசார பிரசுரங்களை ஒட்டிக் கொண்டிருந்த 7 பேர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் பட்டா ரக வாகனத்தில் சென்று ஐ.தே.க கட்சியின் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை மண்டைதீவுப் பகுதிகளில் 7 பேர் கொண்ட குழு ஒட்டியுள்ளது.

தேர்தல் விதிகளை மீறிச் செயற்பட்டதாக தெரிவித்து இந்த 7 பேரையும் ஊர்காவற்றுறை பொலிஸார் அந்த வாகனம் 2000 வரையிலான நோட்டீஸ்களும் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஊடகவியலாளரும் அடங்குவதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## மடு அன்னை ஆவணித் திருவிழா விசேட கலந்துரையாடல்



மன்னார் மடு அன்னையின் ஆவணித் திருவிழா தொடர்பான முன் ஆயத்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.

எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம் பெற்றது.

எதிர் வரும் ஆவணி மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மடு அன்னையின் ஆவணித்திருவிழா திருப்பலிக்கான நவநாள் திருப்பலிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனையும் 15 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப் படவுள்ளது.

இந்த நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தரவுள்ள நிலையில், பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு மடுத்திருத்தலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டி முன் ஆயத்தங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக குடி நீர், சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து, பாதுகாப்பு உட்பட அங்கு மேற்கொள்ளப்பட வேண்டி அவசிய தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில் மடு திருத்தளத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ் பிள்ளை , மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல், பிரதேசச் செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், வைத்தியசாலை அதிகாரிகள் உற்பட திணைக்கள தலைவர்களும் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நிரந்தர வைத்தியரை நியமிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, கொக்கிளாய் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியரை நியமிக்கக்கோரி பிரதேச மக்கள் நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிரந்தர வைத்தியர் இன்மையால் சிறிய நோய்களுக்குக் கூட தாங்கள் முல்லைத்தீவு வைத்தியசாலை அல்லது வெலிஓயா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலையிலுள்ளதர்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கூறினர்.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 50 பொதுமக்கள் கலந்து கொண்டனர். அங்கு சென்ற முல்லைத் தீவு பொலிஸார், அனுமதி பெறாமல் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகக் கூறி ஆர்ப்பாட்டக்காரர்களை கலைந்து செல்ல பணித்ததுக்கிணங்க ஆர்ப்பாட்டம் 11 மணியளவில் முடிவுக்கு வந்தது.

## உதைபந்தாட்டம்

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ். உதைபந்தாட்ட கழகங்களுக்கிடையே நடாத்தும் உதைபந்தாட்ட போட்டியில் பிரிவு இரண்டிற்கான இறுதியாட்ட போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸை எதிர்த்து குருநகர் பாடுமீன் மோதவுள்ளது.

இப் போட்டியானது இன்று மாலை 3.30 மணிக்கு புத்தூர் எவரஸ்ட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் இம் மாதத்திற்கான பாதுகாப்பு குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பிரதேச செயலர் ம. பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் அச்சுவேலி கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர் இக் கூட்டத்தில் வழமைபோல் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(08)

## அலங்காரத் திருவிழா

ஆவரங்கால் மேற்கு ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த புதன்கிழமை அரம்பமாகியது தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இத் திருவிழாவில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை எட்டு மணிக்கு சங்காபிஷேகம் இடம் பெறும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுவாமி பூச் சப்பறத்தில் கிராம ஊர்வலமும் வீதி வலம் வரவிருக்கின்றார்.

(08)

# ஏழைகளுக்கு கைகொடுக்கும் வங்கிகளை இனங்காணவேண்டும்

## வாழ்வின் எழுச்சி வங்கி முகாமையாளர் கருத்து

ஏழைகளிடமிருந்து கூடுதலான வட்டியை அறவிடும் தனியார் நிறுவனங்கள் ஏழைகளுக்கு கைகொடுத்து உதவும் வங்கிகளை மக்கள் இனம்காண வேண்டுமென பருத்தித்துறை வாழ்வின் எழிச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் இ.அன்ரனி தெரிவித்தார்.

புலோலி வடகிழக்கு உருத்திராவத்தை அன்புமாள் முன்பள்ளியின் கண்காட்சி நிகழ்வொன்றின் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதோ அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்பள்ளியின் முகாமைத்துவ குழு தலைவி திருமதி ச.கவிதர்சனி தலைமையில் இடம்பெற்ற இக்கண்காட்சி நிகழ்வில் அன்ரனி தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் மக்களை வளப்படுத்த முக்கிய கேந்திர நிலையமாக முன்பள்ளிஜகள் இயங்கிக் பொண்டிருக்கின்றன. முன்பள்ளி மாணவர்களின் கல்வி விளையாட்டு ஆக்கத்திறன் போன்றவைகள் முன்பள்ளியின் மூலமாகவே மாணவர்கள் மேம்படுத்துகின்றனர். இதற்கு இன்றைய இக்கண்காட்சி எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. உலக நாட்டின் அபிவிருத்தியை முன்னிறுத்திப் பார்க்கும் போது திறமைசாலிகளை முன்பள்ளிகளே உருவாக்குகின்றன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மக்களுக்கு விழிப்ணர்வை வழங்கும் நோக்கில் சுமார் 18 கிராம சேவை அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி எமது வங்கிச் சேவை யை திறமையாக முன்னெடுத்து வருகின்றோம்

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் வங்கி களில் மிகக் கூடிய வட்டியில் பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அதனை செலுத்த முடியாத நிலையில் தற்கொலை புரிந்து உயிரை மாயத்துள்ளனர். இதனை நாம் பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளோம்.

உங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த எமது வங்கியின் கதவுகள் எனறும் திறந்திருக்கும் எப்போபதும் நாம் உங்களுக்கு கைகொடுப்போம். என்று கூறிய அவர் அதிக தொகையில் வேறு வங்கிகளில் கடன்களைப்பெற்றுக் கொண்ட பலர், வட்டியுடன் கூடிய அதிக தொகையை செலுத்தாத நிலையில் எமது வங்கியின் குறைந்தளவ வட்டி விகிதத்தில் கடன் பெற்று அக்கடன்களை நிவர்த்தி செய்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கண்காட்சி நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் புலோலி வடகிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் என். ஜெயசந்திரன் புலோலி வடகிழக்கு கிராம சேவை அலுவலர் சாருமதி. தியாகராசா புலோலி கிழக்கு சாந்தா தோட்டம் சனசமூக நிலைய செயலாளரும் ஊடகவியலாளருமான இ.கிருபாகர சூரியன் வடமராட்சி கல்விவலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் பருத்தித்துறை கல்வி வலய முன்பள்ளி இணைப்பாளர் எஸ்.சுதாயினிதேவி, புலோலி கிழக்கு உத்திராவத்தை மத்திய சனசமூகநிலைய பொருளாளர் ஜெ.கீர்த்தனன் ஆகியொரும் சிறப்புரையாற்றினர். (166)





புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் கிளிநொச்சி அன்னை சாரதாதேவி பாடசாலையில் ஆடிப்பிறப்பை முன்னிட்டு கூழ்மற்றும் கொழுக்கட்டைகள் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளரால் வழங்கி வைக்கப்பட்ட போது...

# அபிவிருத்திப்பணிகள் தொடர்வதற்கு ஈ.பி.டி.பி.யிற்கே எமது ஆதரவு

## புன்னாலைக்கட்டுவன் மக்கள் சுட்டிக்காட்டு



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரால்தான் எமது பகுதி அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டுவருகிறது என புன்னாலைக கட்டுவன் வடக்கு மக்கள் தெரிவித்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் நேற்றையதினம் இடம் பெற்ற, நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் எமது பகுதியில் பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டிய நிலையே காணப்படுகின்றது. இந்நிலையில் தற்போது மின்சாரம் மற்றும் வீதிப்புனரமைப்பு என்பன மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு மேலும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களைத் தொடர்வதற்கு நாம் தொடர்ந்தும் தெரிவிக்கையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கு ஆதரவை வழங்க வேண்டியது அவசியமானது என்றும் சுட்டிக்காட்டினர்.

இதனிடையே எமது கிராமத்தின் அபிவிருத்தியிலேயே அக்கறையும் விருப்பமும் இல்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது பகுதிக்கு வருகை தருவதுமில்லை, எவ்விதமான அபிவிருத்திகளையும் முன்னெடுப்பதும் இல்லை என்றும் சுட்டிக்காட்டினர்.

இதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது நாம் தொடர்ந்தும் மக்களுடன் நின்று, மக்களுக்கான பணிகளை ஆற்றவே விரும்புகின்றோம் என அவர் தெரிவித்தார். அந்தவகையில் மக்கள் எமக்கு அரசியல் பலத்தை தர வேண்டும் அதனூடாகவே அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார். இதேபோன்றதொரு தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஈவினை கிழக்குப் பகுதியிலும் நடைபெற்றது. இந் நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணனும் (ஜீவன்) கலந்து கொண்டிருந்தார்.

# யாழ்.உயரப்புலம் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா

யாழ்.உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயப் பரிசளிப்பு தினம் நாளை மறுதினம் காலை 9 மணியளவில் வித்தியாலயப் பிரதான மண்டபத்தில் அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் ஏகாம்பரநாதன் ஜெகதீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாசும், கௌரவ விருந்தினர்களாக கனடாவைச் சேர்ந்த இ.புஷ்பராசா, சுவிஸ்நாட்டைச் சேர்ந்த ஐ.தில்லைதேசிகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் விசேட பொது வைத்திய நிபுணர் திருமதி நாளாயினி ஜெகதீசன் பரிசில் வழங்கவுள்ளார். (137)

# முதியோர் இல்லத்திலிருந்த மூதாட்டி மகனுடன் வீடு திரும்பினார்

கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த சுமார் 9 வருடங்களாகத் தங்கி வாழ்ந்த வறணியைச் சேர்ந்த கந்தன் கற்பி என்னும் மூதாட்டி மீண்டும் தனது குடும்பத்துடன் இணைந்துள்ளார்.

ஆணும் பெண்ணுமாக இவருக்கு இரண்டு பிள்ளைகள் அவர்களில் சங்கீதப் பட்டதாரியாக இருந்த இவரது மகள் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் தற்கொலை செய்து கொணடார்.

அதனைத் தொடர்ந்து மகனுடன் வாழ்ந்து வந்த இவர் அவருடன் வாழப்பிடிக்காமல் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இருப்பதற்காக அங்கு இடம் பிடித்துக் கொண்டார். இருந்தும் இவ ரது மகன் தாயாரைப் பார்ப்பதற்காக அடிக்கடி முதியோர் இல்லத்துக்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தாய்ப்பாசம் அவரை வாட்டியது.

தன்னுடன் வந்து விடுமாறு பல முறை கேட்டும் தாயார் மறுத்து விட்டார்.

சிலரது புத்திமதிகளையடுத்து சில நாட்களுக்கு முன்னர் மனம் மாறிய தாயார் மகனுடன் செல்வதற்கு சம்மதம் தெரிவித்தார்.

தற்போது மிகவும் மனமகிழ்ச்சியுடன் தாயாரை வைத்துப் பராமரிக்கும் மகன் தாயிற் சிறந்த கோவில் இல்லை, என அடிக்கடி கூறிக் கொள்கின்றார். (137)

# அடிப்படை வசதிகளின்றிய வாடகை வீட்டில் வாழ்வின் எழுச்சி திணைக்கள அலுவலகம்

## பயனாளிகள் அசௌகரியம்

(கரவெட்டி)

கரவெட்டி வாழ்வெழுச்சி திணைக்கள அலுவலகம் போதிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இயங்கி வருவதாக அப்பகுதி வாழ்வின் எழுச்சிப் பயனாளிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்சமயம் இந்த அலுவலகம் போதிய இடவசதி அற்ற நிலையில் கரவெட்டி விக்னேஸ்வரா சந்திக்கு அண்மையாகவுள்ள வாடகை வீடொன்றில் இயங்கி வருகின்றது.

இந்த வாழ்வெழுச்சி திணைக்கள அலுவலகத்திற்கு சொந்தமான ஒரு கட்டடத்தை நிர்மாணிக்கவென கடந்த 2 வருடங்களிற்கு முன் பொது மக்களது நிதிப்பங்களிப்புடன் 2 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு இந்த அலுவலகத்திற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

எனினும், அதன் பின்னர் 2 ஆண்டு காலத்தில் இக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் இந்த வாடகை அலுவலத்திற்கு வரும் பயனாளிகள் போதிய தங்குமிட வசதியின்றி சிரமங்களை எதிர் கொள்வதாக அப்பகுதி வாழ்வெழுச்சி உத்தியோத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் நலனை கவனத்தில் கொண்டு சொந்தக்கட்டடத்தில் இந்த அலுவகத்தை திறப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ,18)

# அடிக்கல் நாட்டும் வைபவம்

(சங்கானை)

சங்கானை நகர மையப்பகுதியில் வேள்ட்விசன் நிறுவனத்தின் 2.5 மில்லியன் ரூபா செலவில் நவீன மலசல கூடத்தொகுதிக்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்றுமுன்தினம் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி. நா.ஜங்கரன் தலைமையில் இடம் பெற்றது.

வலி.மேற்கில் சங்கானை நகரப்பகுதிக்கு வரும் பொதுமக்கள், நுகர்வோர், வியாபாரிகள் மற்றும் திறனாளிகள் ஆகியோரது நன்மை கருதி சங்கானை பழைய மீன் சந்தை கட்டடத் தொகுதி காணியில் அமைந்துள்ள மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான அடிக்கல்லை தவிசாளர் திருமதி. நா.ஜங்கரன் செயலாளர் திருமதி. உ.சாரதா ஆகியோர் நாட்டி ஆரம்பித்து வைத்தனர். இந் நிகழ்வில் சங்கானை வர்த்தக சமூகத்தினர், சுகாதாரப் பரிசோ தகர், வேள்ட் விசன் நிறுவன முகாமையாளர், சபை அலுவலர்கள், பொறுப்பதிகாரிகள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இறுதியாக் சங்கானை நகரப்பகுதிக்கான 15 தொகுதி திண்மகழிவகற்றல் வாளிகளை சபைத் தவிசாளர் நா.ஜங்கரன், வேள்ட் விசன் ரிவோஸ் iii இன் அதிகாரி எவ்.அலெக்ஸ்ரொச் ஆகியோர் இணைந்து வர்த்தக சமூகத் தலைவர் செயலாளரிடம் கையளித்தனர். (92)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர்
(ஈ.பி.டி.பி. தென்மராட்சி இணைப்பாளர்)



X 10

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

பெருந்தன்மையான குணம் எல்லா நற்குணங்களுக்கும் ஆபரணம் போன்றது. - அரிஸ்டாட்டில்

வாராந்தம் தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## போதும், புதுவழி காண்போம்!

தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று இத்தனை கால மாகத் தமிழரின் அரசியலைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட வர்கள், தமிழ்மக்களின் அரசியலுரிமைகள் தொடர்பாக எந்த புத்திசாலித்தன முடிவையோ, திட்டமிட்ட நகர்வையோ காண்பித்ததாய் வரலாற்றில் தடயம் இல்லை.

இப்போதும், சர்வதேசம் எதையாவது செய்யும் தானே என்ற காத்திருப்பும், ஐ.தே.க. ஆட்சி வந்தால் தங்களுக்கான சொந்த சலுகைகளை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்புமே மிச்சமாக இருக்கிறது.

இலங்கையில் ஐ.தே.க தலைமையிலான ஆட்சியை இவர்கள் மட்டுமல்லாது அமெரிக்க, ஐரோப்பிய அரசுகளும் சேர்ந்து விரும்புகின்றன என்றே தெரிகிறது.

இதையே தமிழ் மக்களும் விரும்புகின்ற அரசியலாக இவர்களும் இவர்களது ஊடகப் பலமும் கட்டமைத்துக் காட்டு கின்றன.

ஐ.தே.க. ஆட்சியையோ வேறு அதனிலும் அனுகூலமான ஆட்சியையோ கொண்டு வருவதில் பிரச்சினை இல்லை. அப்படிக் கொண்டுவரும் அந்த ஆட்சியிலாவது நாம் எதைச் சாதிப்போம் என்று கேட்டால், "எந்தச் சிங்கள அரசுமே தீர்வுக் குச் சரிவராது என்றுதான் உங்களுக்கே தெரியுமே!" என்று மறுத்தான் சொல்லிக் கொண்டிருப்பது என்ன ஞாயம்?

தமிழர்கள் 'கிட்டத்தட்டத் தனிநாடு' போன்றதொரு தீர்வுக் காகத்தான் ஒவ்வொரு தேர்தலிலும் ஒற்றுமையைக் காட்டிக் காட்டிக் காத்திருக்கிறார்கள் என்பதுதான் தமிழர்களிடம் இன்றுள்ள அதிபுத்திசாலித்தனமா?

அது எப்படிக் கிடைக்கும், அதன் வடிவம் என்ன, அப்படித் தரக்கூடியவர்கள் யார், அவர்கள் அதுபற்றி ஏதேனும் உறுதியளிக்கிறார்களா என்பது பற்றியெல்லாம் யாரும் எதுவும் பேசுவதில்லை.

வெறுமனே நப்பாசைகளைப் பரவவிட்டுவிட்டுக் காத்திருப்ப தென்பது, காலமறிந்து தமிழ்மக்களுக்குத் தேவையான அரசி யலைச் செய்யவோ சொல்லவோ முடியாமல் இதுகாலவரை செய்துவந்த ஏமாற்று சுயநல அரசியலின் தொடர்ச்சிதான்.

மென்போக்குடையவர் என்றோ, தமிழ் மக்களுக்கு தீர்வுதர இசையக்கூடியவர் என்றோ தேர்தலுக்கு முன் காட்டும் ஒருவரைக் கூட, தேர்தல் முடிந்தவுடன் "அவரும் நம்மை ஏமாற்றி விட்டார்" என்று சொல்லிவிட்டு, அடுத்த தேர்தலிலும் தமிழ் மக்களின் ஒற்றுமையைக் கேட்கலாம் என்றிருப்பது என்ன மாதிரியான ஒரு அரசியல் என்று புரியவில்லை!

இலங்கையில் இன்றிருக்கும் யதார்த்தத்தை ஜீரணிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் தினமும் கற்பனாவாதிகளால் எப்படி நடைமுறைச் சாத்தியமான திட்டங்களையும் தீர்வையும் பற்றி யோசிக்க முடியும்?

இனத்தனித்துவச் சிந்தனையிலிருந்து இன்றும் இறங்கிவர முடியாத் தத்தளிப்பு இது.

தமிழர்கள் இன்றும் புலிக்காலச் சவாலுடனேயே இருக்கிறார் கள் என்ற மனப்பதிவே நம் தரப்பிலிருந்து சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதுதான் ஆட்சிக்கு வரும் எவராலுமே தீர்வைப் பேச முடியாத நிலைமைக்குக் காரணம்.

அப்படியிருக்கையில், நாங்கள் எப்பவும் மாறாமலே, அவர் கள் ஒருநாள் மாறுவர், அதுவரை நாங்கள் ஒற்றுமையைக் காட்டிக் கொண்டிருந்தால் தீர்வு வந்து சேரும் என்று கதை சொல்லிச் செல்வது, தயிர்ப் பானையைத் தலையில் சுமந்தபடி போகும் பவளக்கொடிக் கனவல்லாமல் வேறென்ன?

ஆட்சியாளர்களும் தமிழ்த் தலைமையும் ஏட்டிக்குப் போட்டி யாக இனமுரணை வளர்த்துத் தங்கள் அரசியலிருப்பை ஒவ் வொரு தேர்தலிலும் உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள் என்ப தைப் புரிந்து கொண்டால், அவர்களைக் கடந்து, நாம் எங்கள் தீர்வுக்கான புதுவழியை யோசிப்பதன் அவசியம் புரியும்.

# எங்கள் பிரசார பணிகளை முடக்க நடக்கிறது சதி

## வேட்பாளர் மணிவண்ணன் சீற்றம்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியால் முன்னெடுக்கப்படும் தேர்தல் பரப்புரைகளை அர சாங்கம் திட்டமிட்டு முடக்கிவரு கின்றது என்று அக் கட்சியின் ஊடகப் போச்சாளரும் வேட்பா ளருமான வி.மணிவண்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் ஆதரவாளர் கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டும், தடுத்து வைத் தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக் கப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் தேர்தல் பரப்புரைகளை முடக்குவதற்கு அரசாங்கம் சில சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு அங் கமாக தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடும் ஆதரவாளர்களை இல க்கு வைத்துள்ள பொலிஸார் அவர களுக்கு பல்வேறு தொந்தரவு களைக் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக கடந்த வியாழக் கிழமை பூநகரிப் பகுதிக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசார துண்டுப்பிரசு ரங்களை வாகனம் ஒன்றில் கொண்டு சென்ற கட்சி உறுப்பி னர் ஒருவர் பூநகரிப் பொலி ஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர் மீது இரவு 11 மணிக்கு வீதியால் சென்று கொண்டி ருந்த மக்களிடத்தில் தேர்தல் துண்டுப்பிரசுரத்தினை விநி யோகித்ததான பொய்க் குற்றச் சாட்டினை போட்டு வெள்ளிக் கிழமை கிளிநொச்சி நீதிமன்றத் தில் முற்படுத்தியுள்ளனர்.

இருப்பினும் அவருக்கு பிணை அனுமதியினை நீதவான் வழங்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ். நீர்வியடிப் பகுதியில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த மற்றுமொரு கட்சி உறுப்பினர் எந்தவிதமான காரணங்களும் கூறப்படாமல் பொலிஸாரினால் நீண்ட நேரம் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்.

இவ்வாறு தடுத்து வைக்கப் பட்ட அவரை பொலிஸார் கடு மையாக அச்சுறுத்திய பின்னர் விடுவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் தேர்தல் பரப்புரைகளை திட்டமிட்டு தடுக்கும் முயற்சி களை பொலிஸார் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

எவ்வாறான தடை வந்தா லும் தமிழ் தேசிய மக்கள் முன் னணியின் தேர்தல் நடவடிக்கை கள் தொடர்ந்து முன்னெடுக்கப் படும். சட்டத்தினை மீறி நாங் கள் எந்த பிரசார நடவடிக்கை களையும் மேற்கொள்ளவில்லை.

இனிவரும் காலங்களில். சட்டதிட்டங்களை மீறி நாம் பிர சார நடவடிக்கைகளை மேற் கொள்ளப்போவதில்லை என் றும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# தபால் மூலம் வாக்களிக்க 62,102 பேர் தகுதி இழப்பு

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெறவு ள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தபால மூலம் வாக்களிப்ப தற்கு 566,823 பேர் தகுதி பெற் றுள்ளனர். நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 628,925 பேர் விண்ணப்பித்தி ருந்த நிலையில் 566,823 பேர் தகுதி பெற்றுள்ளனரென பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம. மொஹமட் தெரிவித் தார்.

அந்தவகையில் அதில் 62, 102 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதே வேளை தபால் மூலம் வாக்க ளிப்பதற்கான வாக்குச்சீட்டுக் கள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களிலிருந்து தபால் நிலையங்களுக்கு விநியோ கிக்கப்படவுள்ளன. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலகங் களிலும் தற்காலிக தபால் நிலையங்களை அமைப்பதற் கான அனைத்து நடவடிக்கை களும் மேற்கொண்டிருப்பதா கவும் மொஹமட் தெரிவித் தார்.

இம்முறை இரண்டு கட்டங் களாக தபால் மூல வாக்குப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும், அரச பாட சாலைகளின் ஆசிரியர்களுக் கும் தபால் மூலம் வாக்களிப் பதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன. இதுதவிர ஆக ஸ்ட் மாதம் 05 மற்றும் 06ஆம் திகதிகளில் தகுதி பெற்றுள்ள மற்றைய வாக்காளர்கள் வாக் களிப்பதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

## தீயில் கருகிய கர்ப்பிணிப் பெண்

(கொழும்பு)

எரிகாயங்களுடன் கர்ப்பி ணித் தாயொருவர் மட்டக்க ளப்பு போதனா வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவின் பாலமுனைக் கிரா மத்திலுள்ள குறித்த கர்ப்பி ணித்தாய் குடும்பத்தகராறு காரணமாக தனக்கு தானே தீ மூட்டியுள்ளார் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அயலவர் கள் சென்று குறித்த கர்ப்பி ணித்தாயின் தீயை அணைத் துள்ளனர்.

எரிகாயங்களுக்கான இவர் மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். குறித்த கர்ப் பிணித்தாய்க்கு ஏற்கனவே இரண்டு வயதுடைய குழந் தை இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

# மனுவை நிராகரித்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தேர்தல் மாவட் டத்தில் எதிர்வரும் ஒகஸ்ட் 17ஆம் நாள் நடைபெறவுள்ள நாடா ளுமன்றத் தேர்தலை இடை நிறுத்தக் கோரி மேல்முறை யீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப் பட்டது.

யாழ். தேர்தல் மாவட்டத் தில் போட்டியிடுவதற்காக, எங் கள் ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணி என்ற அரசியல் கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவை யாழ்.மாவட்ட தெரி வத்தாட்சி அதிகாரி நிராகரித்தி ருந்தார்.

இதற்கு எதிராகவும், தமது வேட்புமனுவை ஏற்றுக்கொள்ள நீதிமன்றம் உத்தரவிடும் வரை யிலும், யாழ். மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலை இடைநிறுத்தி வைக்க உத்தரவி டுமாறும் கோரி ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணி சார்பில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந் தது.

இந்த மனுவை நேற்றுமுன் தினம் மேல்முறையீட்டு நீதி மன்றம் தள்ளுபடி செய்து உத் தரவிட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிக ளுக்கு அழைப்பாணை அனுப்ப மறுத்த மேல்முறையீட்டு நீதிமன் றம், வேட்புமனுவை சட்டரீதியா கவே மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி நிராகரித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் கட் டளைச்சட்டத்தின் 15(3)ஆம் பிரிவின் கீழ், மனுதாரரின் கட்சி சட்டத்தின் பிரகாரம் வேட்பு மனுவை பூரணப்படுத்தவில்லை என்று மேல்முறையீட்டு நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

## சட்டவிரோத மின் பாவனை மூவர் பொலிஸாரால் கைது

(நெல்லியடி)

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவர் நெல்லியடி பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர் வதிரிப் பகுதி யைச் சேர்ந்த மூவரே இச் சட்டவிரோத மின் பாவனைக் காக கைதாகியுள்ள னர்.

கைதான இம் மூவரையும் பருத்தித்துறை மாவட்ட நீத வான் முன்நிலையில் பொலி ஸார் ஆஜர் செய்யப்பட்டுள்ள னர். (18)

**பாராளுமன்றத்தில் ஒரு உறுதியான அரசாங்கத்தை அமைப்பதற்கு தங்களிடம் பெரும்பான்மை உள்ளது என்பதை நிரூபிக்க இரண்டு கட்சிகளில் ஏதாவது ஒன்று 113 ஆசனங்களைப் பெறவேண்டும். ஜனதா விமுக்தி பெரமுன (ஜேவிபி) பாராளுமன்ற அரசியலில் முன்னைக் காட்டிலும் வலிமையாக எழுச்சி பெற்றுள்ள இந்த நேரத்தில், விகிதாசாரப் பிரதிநிதித்துவ அமைப்பின் கீழ் மேற்குறிப்பிட்ட இரண்டு கட்சிகளுக்கும் இது ஒரு கடினமான பணி.**



பிரசாத் குணவர்தன (சிலோன் ருடே)

# பிரேமதாஸ சாதனையை முறியடிக்கப் போவது யார் மகிந்தவா அல்லது ரணிலா

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பன ஆகஸ்ட் 17ஆம் திகதிய பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இப்போது களத்தில் உள்ளன. இரண்டு கட்சிகளுமே புதிய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறப்போவதாக பெருமை பேசிக் கொள்கின்றன.

பாராளுமன்றத்தில் ஒரு உறுதியான அரசாங்கத்தை அமைப்பதற்கு தங்களிடம் பெரும்பான்மை உள்ளது என்பதை நிரூபிக்க இரண்டு கட்சிகளில் ஏதாவது ஒன்று 113 ஆசனங்களைப் பெற வேண்டும். ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)பாராளுமன்ற அரசியலில் முன்னைக் காட்டிலும் வலிமையாக எழுச்சி பெற்றுள்ள இந்த நேரத்தில், விகிதாசாரப் பிரதிநிதித்துவ அமைப்பின் கீழ் மேற்குறிப்பிட்ட இரண்டு கட்சிகளுக்கும் இது ஒரு கடினமான பணி.

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ அமைப்பை 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புடன் அறிமுகம் செய்தார், ஆனால் இந்த அமைப்பின் கீழ் ஒரு தேர்தலுக்கு கூட அவர் தலைமை வகிக்கவில்லை.

மாறாக 1977ஆம் ஆண்டுத் தேர்தலில், அவர் பெற்ற ஆறில் ஐந்து பெரும்பான்மையை கொண்ட பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மற்றுமொரு தவணைக்கு நீட்டிப்பதற்காக அவர் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்தினார். தான் ஒரு பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தால், ஐந்து வருடங்கள் பதவியில் இருந்ததின் பின் தனது செல்வாக்கில் சரிவு ஏற்பட்டிருப்பதால், விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தனது ஐ.தே.க. பெரும்பான்மையை பெறாது என்பதை ஜே.ஆர் அறிந்திருந்தார்.

அதனால் தனது குடியுரிமையை இழந்திருந்த திருமதி சிறிமாவோவின் ஸ்ரீ.ல.சு.க வினை பிளவுபடுத்தி ஒக்ரோபர் 1982இல் ஒரு முன்கூட்டிய ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கு அவர் வேகமாக முன்னேறினார். ஸ்ரீ.ல.சு.க பிரதித் தலைவர் மைத்திரிபால சேனநாயக்காவையும் மற்றும் அனுர பண்டாரநாயக்காவையும் தனக்கு ஆதரவாக தேர்தல் மேடையில் ஏற்றுவதை அவர் ஒருவாறு சமாளித்து வெற்றி கண்டார். பிரித்து அரசாளும் அரசியலில் ஜே.ஆர் ஒரு நிபுணர்.

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெறும் தருணத்தில், சில மசோதாக்களை நிறைவேற்றுவதற்கு சிறிது காலத்துக்கு இந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையை தக்க வைத்துக் கொள்வது அவசியம் என விரும்பிய அவரது துணைத் தலைவரான ரணசிங்க பிரேமதாஸவின் விருப்பத்துக்கு மாறாக ஜே.ஆர் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

பிரேமதாஸ ஜே.ஆரை அவரது இல்லத்தில் சந்தித்து பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டாம் என ஜே.ஆரிடம் வேண்டுகோள் விடுத்தார். 'உங்களது வேண்டுகோளை நான் கவனத்தில் கொள்கிறேன்' என அவரிடம் சொன்ன ஜே.ஆர், அன்றிரவே பாராளுமன்றத்தைக் கலைத்தார், அதற்கான காரணம் அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டது என்கிற செய்தியை கேள்விப்பட்ட ஜனாதிபதி பிரேமதாஸ ஒரு துணி விழுந்தவரைப் போல காணப்பட்டார். பிரேமதாஸவிற்கு பாராளுமன்றில் ஒரு தெளிவான பெரும்பான்மை கிடைப்பதை தடுப்பதற்காகவே ஜே.ஆர் அப்படிச் செய்தார் என்பதில் இரகசியம் எதுவும் இருக்கவில்லை.

முதன் முதலான விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் 1989இல் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்காக பிரேமதாஸ ஐ.தே.க.வை இறக்கிவிட்டார். அந்தச் சமயத்தில் திருமதி. பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் திரும்பக் கிடைக்கப் பெற்று தேர்தல் போட்டியில் ஸ்ரீ.ல.சு.க வலிமையாக எழுச்சி பெற்றிருந்தது. வடக்கில் எல்.ரீ.ரீ.ஈ இனால் ஒரு போர் மற்றும் தெற்கில் ஜேவிபி இனால் ஒரு போர் என இரண்டு போர்களுக்கு மத்தியில் நாடு தேர்தலுக்குச் சென்றது.

இரண்டு பக்கமும் எரியும் தீப்பந்தம் ஒன்றை ஜே.ஆர் அவரிடம் கையளித்துச் சென்றதால் சுதந்திரத்துக்குப் பின் ஒரு போதும் நடைபெற்றிராத மிகவும் கடுமையான ஒரு தேர்தலுக்கு பிரேமதாஸ தலைமை தாங்க வேண்டியவரானார்.

ஜே.வி.பி., ஐ.தே.க. வேட்பாளர்களை படுகொலை செய்து கொண்டிருந்தது. நாட்டின் தென்பகுதி எரிந்து கொண்டிருந்தது. ஐ.தே.க. வேட்பாளர்கள் தாக்கப்பட்டு மற்றும் அதிர்ச்சிக்கு உள்ளானார்கள், அந்தப் பிரதேசத்தில் ஐ.தே.க. கட்டுப்பாட்டை இழந்துவிட்டது போலத் தோன்றியது.

பிரேமதாஸ திரையுலக ஜாம்பவானாகிய காமினி பொன்சேகாவை ஐ.தே.க.வில் போட்டியிடச் சம்மதிக்க வைத்து, மாத்தறை மாவட்டத்தில் கட்சிக்குத் தலைமை தாங்குமாறு அவரிடம் வேண்டுகோள் விடுத்தார். பிரேமதாஸ அவரது நம்பிக்கைக்கு உரிய நண்பர் என்பதால் காமினி அந்தத் தெரிவை துணிவுடன் ஏற்றுக் கொண்டார். மாத்தறை மாவட்டத்தில் ஐ.தே.க. பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது, மற்றும் காமினி பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஜே.வி.பி.யின் வன்முறையால் அந்த தேர்தல் நாட்டின் பல பாகங்களிலுத் பாதிப்படைந்தது, ஜே.வி.பி. அங்கத்தவர்கள் வாக்காளர்களின் அடையாள அட்டைகளை பலவந்தமாகப் பறித்துச் சென்றனர், அப்படியிருந்தும் பிரேமதாஸ தனது ஐ.தே.க. வை வெற்றியை நோக்கி வழி நடத்தி பாராளுமன்றத்தில் 125 ஆசனங்களைக் கைப்பற்றி ஒரு சாதனையை நிலைநாட்டினார்.

விகிதாசார பிரதிநிதித்துவ முறை, ஸ்ரீ.ல.சு.க வுக்கு கூட உதவி செய்திருந்தது, தொகுதி அடிப்படை முறையின் கீழ் நடந்த 1977 தேர்தலில் வெறும் எட்டு ஆசனங்களை மட்டும் பெற்றிருந்த அந்தக் கட்சிக்கு இந்த முறை 65க்கும் மேற்பட்ட தொகுதிகளை கைப்பற்ற முடிந்தது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட வேளையில் இந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் எந்த ஒரு கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறாத போதிலும், ஐ.தே.க.அரசாங்கத்தை நடத்துவதற்குத் தேவைப்படும் பெரும்பான்மையை தான் ஒருவாறு பெற்று விட்டதையிட்டு பிரேமதாஸ மகிழ்ச்சியடைந்தார்.

வரும் ஒகஸ்ட் 17இல் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மகிந்த ராஜபக்ஸ ஆகிய இருவரும் முறையே தங்கள் கூட்டணிகளின் கீழ் போட்டியிடுகின்றனர். வெற்றிலை மற்றும் யானை ஆகிய இரண்டு சின்னங்களுமே வாக்காளரிடையே மிகவும் பிரபலமானவை. அடுத்த அரசாங்கத்தை தனது பிரதமர் பதவியின் கீழ் அமைக்கப் போவதாக ராஜபக்ஸ சபதமிட்டுள்ளார். ஒரு முன்னாள் ஜனாதிபதி பொதுத் தேர்தலில் போட்டியிட நுழைந்திருப்பது இதுதான் முதல்முறை.

விக்கிரமசிங்க மூன்றுமுறை பிரதம மந்திரிக்கான போட்டியில் நுழைந்துள்ளார், அவர் இரண்டு முறை ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது பதவியில் உள்ள பிரதமர், மற்றும் தனது கட்டுப்பாட்டில் உள்ள அரசாங்கத்தின் கீழ் தேர்தலுக்குச் சென்றுள்ளார்.

ஜனாதிபதி சிறிசேன நாட்டின் தலைவர் என்கிற முறையில் அரசியல் சார்பற்ற ஒரு நிலைப்பாட்டை வகிக்கிறார். ஒரு சில தனித்த தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் அறிவிக்கப் பட்டிருந்தாலும் நாட்டில் ஒரு அமைதியான சூழ்நிலை நிலவுகிறது.

தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக தேர்தல் ஆணையாளர் கடும் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் சாத்தியமானது என்றே தோன்றுகிறது. ஆள்மாறாட்டம் மற்றும் மோசடிகள் தடுக்கப்பட வேண்டும். முந்தைய தேர்தல்களில் நடைபெற்றதுக்கு சாட்சியமாகவிருந்ததைப் போன்ற போலி தேர்தல் அட்டைகளை அச்சடிப்பதற்கு தேர்தல் தலைவர் இடமளிக்கக் கூடாது. கடந்த காலங்களில் நடந்ததைப் போன்று வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் வாக்குச் சாவடியை விட்டு வெளியே வரக்கூடாது.

விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஸ ஆகியோர் இந்த முறை போட்டியிடுவதில் கடுமையான யுத்தம் நடத்துகிறார்கள். தற்போதைய விகிதாசார பிரதிநிதித்துவத்தின்படி எந்தக் கட்சியுமே மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறாது என்கிற நம்பிக்கை உண்டு. ஒருவேளை ஜே.ஆரினால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவத்தின்படி நடைபெறும் கடைசித் தேர்தல் இதுவாகத்தான் இருக்கக் கூடும், இது வேட்பாளரை விட கட்சிக்கே முன்னுரிமை வழங்குகிறது.

ஜே.ஆர் ஒருமுறை சிங்களத்தில் கூறியது, 'தமுன்னான்சலா இஸ்ஸல்லா அலியாவ ஹொயலா பஸ்ஸே மினிஹாவ தோறகன்ன மொக்கத, பக்ஸய தமாய் மினிஹாட்ட வடிய வதகத்' என்று, (நீங்கள் முதலில் யானையைக் கண்டு பிடித்து பின்னர் மனிதனைத் தேடுவது ஏன் தெரியுமா, மனிதனை விட கட்சிதான் முக்கியமானது).

எந்தக் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறாவிடில் எழும் கேள்வி என்னவென்றால், 25 வருடங்களுக்கு முன்னர் 1989இல் ரணசிங்க பிரேமதாஸ விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பில் நிலைநிறுத்திய சாதனையை முறியடிக்கப்போவது யார் மகிந்தவா அல்லது ரணிலா என்பதுதான்.







# இவர்களுக்கு இங்கு இனி இடமில்லை

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் ஐந்து பேரை, மத்திய குழுவில் இருந்து விரைவில் நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட மகிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்கப்பட்டதை அடுத்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, எம்.கே.டி. எஸ்.குணவர்த்தன, அர்ஜுன ரணதுங்க, எஸ்.பி.நாவின்ன மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியோர் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

இவர்களைக் கட்சியில் இருந்து நீக்குவதற்காக, கட்சியின் மத்திய குழுவை அவசரமாக கூட்டுவதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் அனுர பிரியதர்சன யாப்பா அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும், அதற்கு கட்சியின் தலைவர் என்ற முறையில் அதிபர் மைத்திரிபால சிறிசேன தடை விதித்ததுடன், ஹிருணிகா பிரேமச்சந்திரவின் தீவிர ஆதரவாளரும், சுதந்திரக் கட்சி மத்திய குழு உறுப்பினரான பிரசன்ன சோலங்காராச்சி நீதிமன்றம் சென்று தடை உத்தரவும் பெற்றுக் கொண்டார்.

இதன்படி, எதிர்வரும் 29 ஆம் நாள் வரை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை, கட்சியின் தலைவரின் அனுமதீயின்றிக் கூட்டுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த நிலையில், விரைவில் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை விரைவில் கூட்டி, நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடும், ஐந்து மத்திய குழு உறுப்பினர்களையும் நீக்குவது தொடர்பாக முடிவுகளை எடுக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பெண்களை வலுவூட்ட தேசிய ஆணைக்குழு

ரோஸி நடவடிக்கை



நாட்டிலுள்ள பெண்களை வலுவூட்டி அவர்களின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக தேர்தலின் பின்னர் பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவிருப்பதாக சிறுவர் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்தார். சிறிக்கொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பெண்களின் வளர்ச்சி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பெண்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீதான அக்கறையை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்த ஆணைக்குழு அமைக்கப்படும். இதனூடாக பெண்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு மற்றும் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக அமையும். பெண்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை ஆராய்வதற்கு சகல தேர்தல் தொகுதிகளிலும் பெண்களுக்கான கவுன்சிலிங் நிலையங்கள் அமைக்கப்படும். அடிப்படைக் கல்வியான ஆரம்பக் கல்வி கற்பிப்பதற்கு பெண்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சிக்கான "ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கைத் திட்டங்கள் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மையை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும், இவை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறினார். ஊழல், மோசடிக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனச் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், மகிந்த ராஜபக்ஷவும் அவருடைய சகாக்களும் மீண்டும் ஆட்சிக்கு வருவது நாட்டை அபிவிருத்தி செய்ய வல்ல, மேலும் கொள்ளைகளை மேற்கொள்வதற்கே வருவதாகக் கூறினார்.

# தெற்கு அரசியலில் மீண்டும் பீதி

மிரிஹான வெள்ளைவான் சம்பவமானது தெற்கு அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் மற்றுமொரு வெள்ளை வான் சம்பவம் இடம்பெற்றுள்ளமையானது அரசியல் களத்தைப் பெரும் பரபரப்பாக்கியுள்ளது. இராணுவ இலக்கத் தகடு பொருத்தப்பட்ட வெள்ளை வாகனமொன்றிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் வீரகுமார திஸாநாயக்கவின் சுவரொட்டிகள் மீட்கப்பட்டுள்ளன. இராணுவ இலக்கத் தகடு மற்றும் பிறி தொரு இலக்கத் தகடு பொறிக் கப்பட்ட வெள்ளை வான் ஒன்று கெபதிகொல்லாவ, கொன் கொல்லாவ பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை மீட்கப்பட்டுள்ளது. இந்த வெள்ளை வானில் அனுராதபுரம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் 4 ஆயிரத்து 500 போஸ்டர்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். அனுராதபுரம் பரகஸ்வெவ பகுதியில் வசிக்கும் ஒருவரது பெயரில் குறித்த வான் பதிவு செய்யப்பட்டுள்ளது. இராணுவ இலக்கத் தகடு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மிரிஹான வெள்ளைவான் சம்பவத்தை எதிரணி உறுப்பினர்கள் அரசியல் பரப்புரையாக மாற்றியுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் பாது காப்புச் செயலாளர் பதவியை வகித்த கோத்தாபய ராஜபக்ஷவையும் கொலை செய்யும் நோக்கிலேயே இவ்வாறானதொரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது என விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டி வருகின்றார். இந்நிலையில், அவரது கட்சி உறுப்பினரான வீரகுமார திஸாநாயக்கவின் போஸ்டர்களே வெள்ளை வானிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. எனவே, அரசியல் பிரசாரங்களுக்காகவும் வாக்கு வேட்டை நடத்துவதற்காகவும் இவ்வாறு வெள்ளைவான் புரளிகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர் என விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சிவகுரு பாலகிருஷ்ணன்

(ஈ.பி.டி.பி. வலிகாமம் மேற்கு இணைப்பாளர்)




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# அப்படி என்ன நடந்தது



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கையைப் பிடித்த அக்குரஸ்ஸ, தலஹகம பிரதேசத்தைச் சேர்ந்த ஹேவாநாரந்தெனிய என்பவர் நடைபெற்ற சம்பவத்தை ஊடகங்களிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அக்குரஸ்ஸ பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றபோது தனது கையைப் பிடித்து இழுத்ததாக தெரிவித்து பொதுமகன் ஒருவருக்கு அடிக்க தயாராகும் காட்சி ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இவ்வாறு கையைப் பிடித்த நபர், நடந்த சம்பவத்தை நேற்று முன்தினம் இவ்வாறு ஊடகங்களிடம் கூறுகின்றார்,

தான் ஒரு மகிந்த பிரியன். எனது வீட்டின் சுவர்களை வந்து பார்த்தால் இது தெரியும். எமது பிரதேசத்தில் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளும் எந்தக் கூட்டத்தையும் நான் தவற விடமாட்டேன்.

அன்றைய தினம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாகனத்திலிருந்து இறங்கி வரும்போது, எல்லோரும் கையைக் கொடுத்துக் கொண்டிருந்தனர். ஜனாதிபதியைக் கண்டபோது நான் எங்கு இருக்கின்றேன் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. நானும் அருகில் செல்ல முற்பட்டேன். நான் ஜனாதிபதியின் கையைப் பிடித்தேன். அதற்கிடையில் நெரிசல் அதிகரித்து. கையை விட முன்னர் நான் தள்ளுண்டு சென்றேன்.

சனக் கூட்டத்தில் தள்ளுண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விழப்பார்த்தார். தவறு என்மீதுதான் உள்ளது. இதற்காக நான் வருந்துகின்றேன் எனவும் அவர் ஊடகங்களிடம் குறிப்பிட்டுள்ளார்.



யாழ். குடாநாட்டில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நீர்நிலைகள் வற்றிக் காணப்படுவதைக் காணலாம். (66)

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் ஓமந்தை நடராஜானந்தா பாடசாலை

## மாணவர்களின் பெற்றோர் கவலை

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை நடராஜானந்தா வித்தியாலய மாணவர்கள் ஓட்டைக் கொட்டகை ஒன்றினுள் கல்வி கற்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக 20 வருடங்களாக வேறு பாடசாலைகளுடன் இணைந்து செயற்பட்ட இப் பாடசாலை மீள் குடியேற்றத்தின் பின் 2013 ஆம் ஆண்டு மீண்டும் தனது சொந்த இடத்தில் சிறிய கொட்டில் ஒன்றில் இயங்க ஆரம்பித்தது. இப்பாடசாலைக்கு என ஓர் ஓலைக் கொட்டகை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டு தரம் 5 வரையான மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். தற்போது அந்தக் கொட்டகை பழுதடைந்த நிலையில் கொழுத்தும் வெயிலும், பெய்யும் மழையிலும் நனைந்தவாறு கல்வி கற்கவேண்டிய அவல நிலை மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதிலும் இப்பாடசாலையின் ஒரு பக்க வேலி ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியாக காணப்படுவதனால் பற்றைகளால் சூழப்பட்டுள்ள பாதுகாப்பற்ற வகுப்பறைகளில் அச்சத்துடனேயே கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். வடமாகாண கல்வி அமைச்சர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பலர் இவ்வீதிவழியாக பலதடவை பயணித்த போதும் இப்பாடசாலையை கண்டு கொள்ளவில்லை எனவும் மாணவர்களும் பெற்றோர்களும் கவலை வெளியிட்டுள்ளனர். இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கிய 7 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் அக்கிராமங்களும் கைவிடப்பட்டுள்ளது. குறிப்பாக பழமையான கிராமம் ஆகிய வீமன்கல் கைவிடப்பட்டமையால் அருகில் சிங்களக் குடியேற்றம் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# குறும்பட வெளியீடு

(திருநெல்வேலி)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தின் "வற்றுப்பெருக்கு" குறும்பட வெளியீட்டுவிழா கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணம் கலந்துகொண்டார்.

மங்கள விளக்கேற்றல், இறை வணக்கத்தைத் தொடர்ந்து கலாசாலையின் மாணவர் மன்றத் தலைவர் ம.சயந்தரூபன் வரவேற்புரையை வழங்கினார். வாழ்த்துரையை உபஅதிபர் த. கோபால கிருஸ்ணனும், வெளியீட்டுரையை பிரதி அதிபர் ச. லலீசனும் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை யாழ். திருக்குடும்பக் கனனியர்மட ஆசிரியரும், திருமறைக்கலா மன்றத்தின் பிரதி இயக்குனருமான ஜோன்சன் ராஜ்குமார் வழங்கினார்.

முத்தமிழ் மன்றத் தலைவர் கு. உதய பாஸ்கரன் ஏற்புரையையும், காப்பாளர் அ.பௌநந்தி நிறைவேற்றுரையையும், உப தலைவர் பொன். சிவகரன் நன்றியுரையையும் நிகழ்த்தினர்.(137)

# மும்மொழி வழிகாட்டியை தயாரிக்க நிபுணர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மொழி ஆய்வு நடவடிக்க்கைகளை மேலும் திறம்பட முன்னெடுக்கும் நோக்கில் மும்மொழி வழிகாட்டி நூல் ஒன்றினை தொகுக்க அரச கரும மொழிகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவென இத்துறையில் சிறந்த அனுபவமும் தகைமையும் கொண்ட நிபுணர் குழுவிடமிருந்து விண்ணப்பங்களை ஆணைக்குழு கோரியுள்ளது.

இப்பணியினை ஆற்றுவதற்காக எதிர்பார்க்கும் பணத்தொகை மற்றும் நிபுணர்குழு அங்கத்தவர்களின் கல்வித்தகைமைகளை குறிப்பிட்டு அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவர், அரச கரும மொழிகள் ஆணைக்குழு, இல.95, ஆனந்தராஜ கருணா மாவத்தை கொழும்பு - 10 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச கரும மொழிகளை அதனோடு இணைந்ததாக அரசாங்க நிறுவனங்களில் பயன்படுத்துவது குறித்த ஆய்வினையும் மேற்கொண்டுள்ளது.

இந்த ஆய்வில் அரச நிறுவனங்களின் பிரதான பெயர்ப்பலகைகள், உள்ளக பெயர்ப்பலகைகள் மற்றும் பொதுமக்களுக்கென வெளியிடப்படும் ஆவணங்களும் பரிசீலனைக்குட்படுத்தப்படவுள்ளன.

மேலும் அரச ஊழியர்களின் மொழித்தேர்ச்சி, அரச கரும மொழிக்கொள்கைக்கான சுற்றறிக்கைகள் மற்றும் அரச ஊழியர்களின் அறிவு என்பனவும் ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளதாக ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுமியை மணம்செய்ய முயற்சி இளைஞருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(பருத்தித்துறை)

பதின்ம வயதுச் சிறுமியை திருமணம் செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைதான இளைஞனை இம்மாதம 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை மாவட்ட நீதவான் மா. கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

பரந்தனைச் சேர்ந்த இச்சிறுமியை பெற்றோருக்குத் தெரியாது கரவெட்டி மேற்கைச் சேர்ந்த இளைஞன் கூட்டிச்சென்றதாக சிறுமியின் பெற்றோர் கிளிநொச்சி பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்தே இவ்விருவரும் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 6 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் இவர்களை கடந்த 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு கடந்த 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிர்வரும் 30 ஆம் திகதிவரை குறித்த இளைஞனை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் சிறுமியை கைதடி இரட்சணிய சேனை இல்லத்தில் சேர்ப்பிக்கவும் உத்தரவிட்டார். (அ,18)

# முகாமைத்துவ டிப்ளோமாவிற்கு விண்ணப்பம் கோரல்

பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பகுதிநேர பாடநெறிக்கான விண்ணப்பங்களை மகரகம தேசிய கல்வி நிறுவகம் கோரியுள்ளது.

தமிழ் மொழிமூலமான இக்கற்கை நெறி வார இறுதி நாட்களை உள்ளடக்கி 18 மாதகால பாடநெறியெனவும் பாதுக்கை, மீபே சந்தியில் அமைந்துள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவ பீடத்தில் வகுப்புக்கள் நடைபெறுமெனவும் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி க.பொ.த உயர்தரத்தில் அல்லது பல்கலைக்கழக பட்டத்துடன் கல்வி நிர்வாக அதிபர் சேவை மற்றும் ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் அல்லது ஆசிரியர் சேவை தரம் -1 அல்லது, பதவி 2 இல் 11 ஆவது தரம் அல்லது கல்வி நிறுவனமொன்றின் தலைவராக இருத்தல் வேண்டும்.

மேலும் நான்கு ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் ஒரு வருட நிர்வாக அனுபவமும் உடையவராக இருத்தல் வேண்டுமெனவும் கல்வி முகாமைத்துவம் தொடர்பான இரு மணித்தியால வினாப் பத்திர நுழைவுப் பரீட்சையொன்றில் கூடுதல் புள்ளிகளை பெற்றவர்கள் பாட நெறிக்காக தெரிவு செய்யப்படுவார்களெனவும் அதில குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை நிர்வாகத்தின் பணிப்பாளர் நாயகத்தினது 7041168 கணக்கிலக்கத்துக்கு (இலங்கை வங்கி) 500 ரூபா செலுத்திய பற்றுச் சீட்டினையும் இணைத்து கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவ பீடம், தேசிய கல்வி நிறுவகம் மீபே சந்தி பாதுக்கை என்ற முகவரிக்கு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# முறிந்தது காதல்



(மொஸ்கோ)

ரஷ்யாவை சேர்ந்த பிரபல ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா. தனது வசீகரமான ஆட்டத்தால் ரென்னிஸ் இரசிகர்களின் மனதை கிறங்கடித்தவர்.

அழகான தோற்றத்தாலும், அபார மான ஆட்டத்தாலும் உலகம் முழுவதும் ஏராளமான இரசிகர்களை பெற்று இருக்கிறார்.

28 வயதான ஷரபோவா ரென்னிஸ் வீரரான டிமிட்ரோவை காதலித்து வந் தார். கடந்த 2013ஆம் ஆண்டு மே மாதம் முதல் இவர்களது நட்பு இருந்து வந்தது. இருவரும் திருமணம் செய்ய வும் திட்டமிட்டிருந்தனர்.

இந்த நிலையில் இவர்களது காத லில் விரிசல் ஏற்பட்டு முறிந்துள்ளது. இதை டிமிட்ரோவ் தெரிவித்துள்ளார். பல்கேரியாவை சேர்ந்த 24 வயதான அவர் இதுபற்றி கூறும்போது, எங்களது பாதையில் பிரிவு ஏற்பட்டுள்ளது. நாங்கள் இருவரும் சிறந்த அனுபவத்தை பெற்றோம். ரென்னிஸிலும், வாழ்க்கை யிலும் ஷரபோவா வெற்றி பெற மகிழ்ச்சி யுடன் வாழ்த்துகிறேன். நான் இனி எனது ஆட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்துவேன் என்றார்.

மரியா ஷரபோவா உலக ரென்னிஸ் வீராங்கனைகளின் தரவரிசைப்பட்டிய லில் 2ஆவது இடத்தில் உள்ளார். 5 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென் றுள்ளார்.

# அம்பாந்தோட்டையில் இன்று இறுதி ஒரு நாள் ஆட்டம்

(அம்பாந்தோட்டை)

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொட ரின் ஐந்தாவதும், இறுதியுமான ஆட்டம் இன்று அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, நடைபெற்ற நான்கு போட்டிகளில் மூன்று போட்டிகளில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி ஒரு நாள் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் தொடரை வென்றது போன்று ஐந்தாவது போட்டியிலும் வெற்றியைப் பதிவு செய்வோம் என பாகிஸ்தான் அணியின் கப்டன் அசார் அலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மண்ணில் ஒரு நாள் தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது. இதே நிலையை தொடர்ந்து தக்கவைக்க வேண்டும் என்ற விருப்புடன் செயற்பட்டு வருகின்றோம். அனைத்து வீரர்களும் இளம் வயதுடைய வர்களாக இருப்பதால் சாதிக்க வேண் டும் என்ற துடிப்புடன் செயற்படுகின்றார் கள். இந்நிலையில் இன்று அம்பாந் தோட்டையில் நடைபெறவுள்ள ஐந் தாவது ஒரு நாள் போட்டியில் வெற்றி யைப் பதிவு செய்யும் முனைப்புடன் களமிறங்குவோம் எனத் தெரிவித்துள் ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் அணி யுடனான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரை இழந்துள்ள இலங்கை அணி இறுதி ஒரு நாள் போட்டியை வெல்லும் முனைப்புடன் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது குறித்து இலங்கை அணிக் கப் டன் மத்தியூஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

பந்துவீச்சு, துடுப்பாட்டம் என இரண்டிலும் முன்னேற்றம் தேவை. திரிமன்னே, டில்சான் போன்றோர் சிறப் பாக ஆடி வருகின்றபோதிலும் ஏனைய வீரர்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் செயற்பட்டால் பெரு ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றிருக் கலாம். பந்து வீச்சிலும் இதே நிலைதான் தொடர்கின்றது. இன்றைய போட்டி யில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு ஆறுதல் வெற்றி பெற முயற்சிப்போம் எனத் தெரிவித்தார்.

# விருது விழாவில் காதல் ஜோடி





மும்பையில் நடைபெற்ற ஒரு விருது வழங்கும் விழாவில் அனுஷ்கா சர்மா-ஹோலி முதன்முறையாக ஜோடி சேர்ந்து பங்கேற்றுள்ளனர்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவர் ,ஹோலி, பொலிவுட் நடிகை அனுஷ்கா சர்மா இருவரும் நீண்ட கால மாக காதலித்து வருகின்றனர்.

இருவரும் ஜோடியாக பல்வேறு இடத்திற்கு சென்றிருக்கிறார்கள். ஆனால் விருது விழா போன்றவற்றில் ஜோடி யாக பங்கேற்றதில்லை.

இந்நிலையில் மும்பையில் நடை பெற்ற Vogue India Beauty Awards 2015 முதன்முறையாக ஜோடியாக பங்கேற்ற னர். இதில் எடுக்கப்பட்ட அசத்தலான புகைப்படங்கள் இணையத்தில் வைரஸ் ஆகியுள்ளது.

# இலங்கையில் சாதிக்க முயற்சிப்பேன்



இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடர் சவாலானது. இருப்பினும் சிறப் பாகப் பந்து வீசி அணியின் வெற்றிக்கு துணை புரிய முயற்சிப்பேன் என இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பின் இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் மிஸ்ரா இந்திய அணியில் இடம்பிடித் துள்ளார். இது குறித்து கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேறொரு வீரரின் செயற்பாட்டை பார்த்து தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளத் தேவையில்லை. எனக்கு எப் போதும் எனது திறமை மீது நம்பிக்கை உண்டு. நான் நல்ல நிலையில் இருக் கிறேன். நன்றாக பந்து வீசுகிறேன். எனவே நான் நம்பிக்கையுடன் உள்ளேன். ஆனால் இதில் முக்கியம் எது என்றால், அங்குள்ள சீதோஷண நிலைக்கு தக்கபடி எம்மை சீக்கிரம் மாற்றிக்கொள்ள வேண்டும். இலங்கை தொடர் மிகவும் கடினமானது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இலங்கைத் துடுப்பாட்ட வீரர்கள் சுழற் பந்து வீச்சை திறம்பட சமாளிக்கக்கூடிய வர்கள். அங்குள்ள ஆடுகளங்கள் துடுப் பாட்ட வீரர்களுக்குச் சாதகமானவை. எனவே தொடர் பெரும் சவாலாக இருக்கப்போகிறது என்றார்.

# கிறிஸ் கெய்லுக்கு சத்திர சிகிச்சை

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணியின் அதிரடி மன்னன் 35 வயதான கிறிஸ் கெய்லுக்கு நீண்ட காலமாக முதுகுவலி பிரச்சினை இருக்கிறது. இந்த நிலையில் முதுகுவலியை சரி செய்ய அவர் சத்திரசிகிச்சை செய்யவிருக்கிறார்.

இது குறித்து கிறிஸ் கெய்ல் கூறுகையில், நலநிதி கிரிக்கெட் ஒன்றில் விளை யாட இருக்கிறேன். அதன் பின் முதுகுவலிக்கு சத்திர சிகிச்சை செய்ய முடிவு செய்திருக்கிறேன். சத்திர சிகிச்சைக்குப் பின் அதில் இருந்து குணமடைய ஓய்வு தேவை. இரண்டு முதல் மூன்று மாதங்கள் கிரிக்கெட் விளையாட முடியாது. அநேகமாக டிசம்பர் மாதம் மீண்டும் கிரிக்கெட் களம் திரும்புவேன் என்று நினைக்கிறேன் என்றார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



முருகேசு சந்திரகுமார்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



7

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# உலகக் கிண்ண ருவென்ரி-20 ஓமன், ஆப்கான் தகுதி



(டப்ளின்)

அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெற வுள்ள ஆறாவது உலகக் கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் விளையாடும் வாய்ப்பை ஓமன் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் பெற் றுள்ளன.

ஆறாவது உலகக் கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2016) இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் அயர்லாந்து தலை நகர் டப்ளினில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிளே-ஓப் சுற்றில் ஆப்கானிஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பப்புவா நியூகினியா அணி யைத் தோற்கடித்து தொடர்ந்து 4ஆவது முறையாக ருவென்ரி-20 உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி பெற்றது. மற்றொரு பிளே-ஓப் சுற்றில் ஓமன் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் நமீபியாவை வீழ்த்தி உலக கோப்பை போட்டியில் முதல்முறையாக பங்கேற் பதை உறுதி செய்தது. இதன் மூலம் அடுத்த 4 ஆண்டுகளுக்கு ருவென்ரி-20 சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும் அந்தஸ்து ஓமனுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை வழங்கி யுள்ளது.

இந்தியாவில் நடைபெறவுள்ள ருவென்ரி-20 உலக கோப்பையில் மொத்தம் 16 அணி கள் பங்கேற்கின்றன. இந்தியா, அவுஸ்ரேலியா உள் பட டெஸ்ட் விளையாடும் 10 அணிகள் மற்றும் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, ஹொங்காங், நெதர்லாந்து, ஆப்கானிஸ்தான், ஓமன் ஆகிய அணிகள் களம் காண உள்ளன.

# பாடசாலை மட்ட தேசிய கால்பந்து யாழ்ப்பாணத்தில் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெருவிளையாட்டின் கால்பந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணத்தில் நடாத்தப் படவுள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டு விழா அண்மையில் நாடு தழுவிய ரீதியில் நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில் தேசிய மட்டப் போட்டிகள் செப்ரெம்பர் ஒன்பதாம் திகதி முதல் ஒக்ரோபர் 10ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் இதற்கான அட்டவணையும் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணத்தில் நடாத்தப் படவுள்ளது. இதில் 15,17 மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி மைதானங்களில் நடைபெற வுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல வீரர்கள் இலங்கை கால்பந்தாட்ட அணியில் இடம்பிடித்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் தேசிய மட்டப்போட்டி யொன்று நடாத்தப்படவிருப்பது உண்மையில் யாழ். மாவட்டத்தின் கால்பந்து தரம் மேலும் உயர்வடையவும், உத்வேகத் தையும் அளிக்கும் என கால்பந்து வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக, பாடசாலை மட்ட தேசிய அணிகளில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த சானு, கௌரி, தர்மிகா, கஜனன் மற்றும் சென்.ஜோண்ஸ், இளவாலை ஹென்றியரசர் கல்லூரியைச் சேர்ந்தோரும் மற்றும் இலங்கை கால்பந்து அணியின் ஞானரூபன் போன்றோர் இடம்பிடித்து வடக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மட்ட தேசிய மட்ட கால்பந்து போட்டி இதுவரை யாழ்ப் பாணத்தில் நடாத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (93)




## இளைஞர் சேவை மன்ற மாவட்ட மட்ட கரப்பந்து மகாஜனாவில் இன்று

(தெல்லிப்பளை)

இளைஞர் சேவை மன்றத்தினால் பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டிகள் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில் மாவட்ட மட்டப் போட்டிகள் இன்று தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் பிரதேச மட்டத்தில் முதலிரு இடங்களைப் பிடித்துக் கொண்ட அணிகள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

ஏனைய மாவட்ட மட்டப்போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (93)

## சிநேகபூர்வ கரப்பந்தாட்டம் மகாஜனக் கல்லூரி வெற்றி

(தெல்லிப்பளை)

பல்கலைக்கழக அணிக்கெதிரான சிநேகபூர்வ கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மற்றும் யாழ். பல்கலைக்கழக பெண்கள் அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ கரப்பந்தாட்டப் போட்டி நேற்று தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதல் செட்டை 26-24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற மகாஜனக் கல்லூரி அணி முன்னிலை பெற்றதுடன் தொடர்ந்து நடைபெற்ற இரு செட்களையும் 25-22, 25-21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றதுடன் போட்டியை 3-0 என்ற நேர் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் பங்குகொண்டதன் மூலம் நிறைய விடயங்களைக் கற்றுக்கொண்டதாக இரு அணி வீரர்களும் மகிழ்ச்சி தெரிவித்ததுடன் இது போன்ற சிநேகபூர்வ போட்டிகள் சிறந்த உத்வேகத்தை அளிக்கும் எனவும் தெரிவித்தனர். (93)

## மூன்றாமிடம் வதிரி டையமன்ஸ்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்தை வதிரி டையமன்ஸ் அணி பிடித்துக் கொண்டது.

இப்போட்டி கடந்த வாரம் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஊரெழு றோயல் அணியும் வதிரி டையமன்ஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே வதிரி டையமன்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல்களையும் பெற்றவண்ணமிருந்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் முனைப்புடன் ஊரெழு றோயல் அணி செயற்பட்ட போதிலும் டையமன்ஸ் அணியின் பிற்கள வீரர்களின் பொறுப்பான ஆட்டம் காரணமாக றோயல் அணியால் முன்நகர்ந்து கோல்களைப் பெற்றுக் கொள்ள முடிய வில்லை.

நிறைவில் வதிரி டையமன்ஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப்பிடித்துக் கொண்டது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் அணியை வீழ்த்தி நாவாந்துறை சென். மேரிஸ் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜொலிக்கிறது பங்களாதேஷ்

இளம் வீரர்களை அதிகம் கொண்டுள்ள பங்களாதேஷ் அணி இந்தியாவில் நடைபெறவுள்ள ருவெண்ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் முன்னணி அணிகளுக்கு அச்சுறுத்தல் மிக்கதாக விளங்கும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் அக்ரம் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அணியின் பெறுபேறுகள், அதன் கிரிக்கெட் தரம் உயர்வான நிலையில் உள்ளது. இதன் காரணமாகவே, பாகிஸ்தான், இந்தியா, தென்னாபிரிக்க அணிகளுக்கெதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்ற முடிந்தது. அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள ருவெண்ரி-20 உலகக் கிண்ணத்தொடரும் முன்னணி அணிகளுக்கு அச்சுறுத்தல் அளிக்கும் அணியாக பங்களாதேஷ் விளங்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புளியங்கூடல் மகாமாரியின் மாபெரும் மென்பந்து தம்பாட்டி காந்திஜி வசம் கிண்ணம்




(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை - புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக்கழகம் தீவக அணிகளுக்கிடையில் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை தம்பாட்டி காந்திஜி அணி கைப்பற்றிக் கொண்டது.

தீவக அணிகள் பங்குபற்றிய இப்போட்டித் தொடர் கடந்த 18 மற்றும் 19ஆம் திகதிகளில் புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை ஹீரோ ஸ்ரார் அணியும் தம்பாட்டி காந்திஜி அணியும் மோதின. அணிக்கு ஐந்து ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஹீரோ ஸ்ரார் அணி சகல விக்கெட்களையும் இழந்து 69 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலுக்கு 70 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தம்பாட்டி காந்திஜி அணி 4.5 ஓவர்கள் நிறைவில் 70 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்ததுடன் கிண்ணத்தையும் கைப்பற்றிக் கொண்டது. இதில் அ.துஷ்யந்தன் 25, ரி. நயிதன் 14 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு துணை புரிந்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக அ.துஷ்யந்தன், தொடர் நாயகனாக குமரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஊர்காவற்றுறை புளியங்கூடல் விளையாட்டுக்கழக நிர்வாகம், வருடா வருடம் இப்போட்டியை நாங்கள் நடாத்தி வருகின்றோம். இதன் மூலம் சிறந்த மென்பந்து கிரிக்கெட் வீரர்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. தீவகத்தின் முன்னணி அணிகள் பல இத்தொடரில் பங்குபற்றி வருகின்றன. அடுத்து வரும் போட்டித் தொடர்களில் யாழ். மாவட்ட அணிகளையும் பங்குபெறச் செய்ய முயற்சிப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



பசுபதி சீவரத்தினம்

(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)



X 6

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# கதிரைகளுக்கான போர்

**- மப்றூக் கட்டுரையிலிருந்து.**

அம்பாறை மாவட்டம், முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டது. சிங்களவர்கள் இரண்டாவது பெரும்பான்மை. தமிழர்கள் இந்த மாவட்டத்தில் சிறுபான்மையாக உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து 07 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் படுவார்கள். அதில் ஓர் ஆசனம், அநேகமாக தமிழர் தரப்புக்குச் சென்று விடும். ஏனைய 06 ஆசனங்கள்தான் "அடி"படுபவை.

கடந்த 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில், ஐ.ம.சு.கூட்டமைப்பு 04 ஆசனங்களையும், ஐ.தே.கட்சி 02 ஆசனங்களையும், இலங்கை தமிழரசுக் கட்சி 01 ஆசனத்தினையும் கைப்பற்றியிருந்தன.

இதில், ஐ.தே.கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் மு.கா. வேட்பாளர்களும் ஐ.ம.சு. கூட்டமைப்புடன் இணைந்து, அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றிலைச் சின்னத்திலும் போட்டியிட்டனர்.

அந்தத் தேர்தலில் - ஐ.ம.சு. கூட்டமைப்பானது அம்பாறை மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று 04 உறுப்பினர்களை வென்றது. இதில் அதாவுல்லா மட்டுமே முஸ்லிம். மற்றையவர்கள் சிங்களவர்கள்.

ஐ.தே.கட்சிக்கு இரண்டு ஆசனங்கள் கிடைத்தன. மு.காங்கிரஸின் வேட்பாளர்களான ஹரீஸ் மற்றும் பைஸால் காசிம் ஆகிய இருவரும் அந்த ஆசனங்களுக்குத் தெரிவாகினர்.

இவை 2010 பொதுத் தேர்தல் நிலைவரமாகும்.

கடந்த பொதுத் தேர்தலோடு ஒப்பிடுகையில், இம்முறை, அம்பாறை மாவட்ட தேர்தல் களத்தில், அநேக விடயங்களில் மாற்றங்கள் ஏற்படவேயில்லை. 2010ஆம் ஆண்டு போலவே, இம்முறையும் தமிழரசுக் கட்சி, களத்தில் குதித்திருக்கிறது. ஐ.ம.சு.கூட்டமைப்புடன் இணைந்து அமைச்சர் அதாவுல்லாவும் அவருடைய இரண்டு வேட்பாளர்களும் தேசிய காங்கிரஸ் சார்பாக போட்டியிடுகின்றனர். அதேபோல், ஐ.தே. கட்சியுடன் கூட்டணியமைத்து, யானைச் சின்னத்தில் மு.கா. களமிறங்கியுள்ளது.

கடந்த முறை, முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக யானைச் சின்னத்தில் களமிறங்கிய அதே மூன்று வேட்பாளர்கள் தான் இம்முறையும் களமிறக்கப் பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அ.இ.ம.காங்கிரஸ் இம்முறை பொதுத் தேர்தலில் முதன்முறையாக, அம்பாறை மாவட்டத்தில் தனது மயில் சின்னத்தில் தனித்துக் குதித்திருப்பது புதிய விடயமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் ஒவ்வொரு அணியும் 10 வேட்பாளர்களை களமிறக்க வேண்டும். மு.கா.வானது ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிடும் நிலையில் 03 முஸ்லிம் வேட்பாளர்களை மட்டும் களமிறக்கியுள்ளது. தேசிய காங்கிரஸானது ஐ.ம.சு.கூவுடன் இணைந்து போட்டியிடுகின்ற நிலையில், அவர்கள் தரப்பிலும் அமைச்சர் அதாவுல்லா உள்ளடங்கலாக, 03 பேர் களமிறங்கியுள்ளனர். ஆனால், அ.இ.ம.காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதால், அந்தக் கட்சி சார்பில் 10 வேட்பாளர்கள் களத்தில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.



இவ்வாறானதொரு நிலை யில், அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் வாக்குகள் சிதறிப்போய் விடுமோ என்கிற கவலையும், அதனால், முஸ்லிம் பிரதிநிதித்துவங்களில் வீழ்ச்சி ஏற்பட்டுவிடுமோ எனும் அச்ச நிலையொன்றும் சமூக அக்கறையாளர்களிடையே ஏற்பட்டுள்ளது. ஆனால், இது தொடர்பில் களத்திலுள்ள அரசியல்வாதிகளில் கணிசமானோருக்கு எந்தவிதமான சொரணைகளும் இல்லை.

முஸ்லிம் கட்சிகள் - தேசிய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுகின்ற போது, ஆசனப் பங்கீட்டில், 03 அபேட்சகர்களை தமது கட்சி சார்பில் பெற்றுக் கொள்வதில் முனைப்புக் காட்டி வருகின்றன. ஒரு வாக்காளருக்குள்ள மூன்று விருப்பு வாக்குகளையும், தமது அபேட்சகர்களுக்கு "அலுங்காமல் குலுங்காமல்" பெற்றுக் கொள்ளலாம் எனும் நம்பிக்கையில்தான், முஸ்லிம் கட்சிகள் மூன்று வேட்பாளர்களைக் களமிறக்குகின்றன.

இவ்வாறான பின்னணியில், இப்போது களமிறங்கியுள்ள முஸ்லிம் கட்சிகளுக்குள்ள வெற்றி வாய்ப்புகள், எவ்வாறு அமையப் போகின்றன என்பது குறித்து, பல்வேறு அனுமானங்கள் உள்ளன.

முஸ்லிம் காங்கிரஸை பொறுத்தவரையில், அந்தக் கட்சியானது, ஐ.ம.சு.கூ.வோடு இணையாமல், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியமைத்து தேர்தலில் போட்டியிடுவது, அந்தக் கட்சிக்கு சாதமாகும். ஐ.ம.சு.முன்னணியில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுகின்றமையும், முஸ்லிம் மக்களிடையே மஹிந்த ராஜபக்ஷவுக்கு விரோதமான மனப்பான்மை இன்னும் காணப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மூன்று ஆசனங்களை வென்றெடுக்கும் நோக்குடன் மு.காங்கிரஸ் களமிறக்கியுள்ள மூன்று வேட்பாளர்களில் இருவர் - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் பைசால் காசிம் ஆவர். மற்றையவர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர். இந்தத் தேர்தல் களத்தில், புதிய முகங்களை அபேட்சகர்களாகக் காண்பதற்கு ஆசைப்பட்ட மு.காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு சற்று ஏமாற்றம் தான். மூவரும், பதவிகள், அதிகாரத்தில் இருந்தவர்கள் என்பதனால், அவர்கள் தொடர்பில் அதிருப்திகள் இருக்கின்றமையினை மறைத்து விட முடியாது.

மறுபுறம், மு.காங்கிரஸின் எதிராளியான முன்னாள் அமைச்சர் அதாவுல்லா உட்பட மூன்று உறுப்பினர்கள்தான் அவரின் தேசிய காங்கிரஸ் சார்பாக ஐ.ம.சு.கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுகின்றனர். ஐ.ம.சு.கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில், அதாவுல்லாவின் கட்சிக்காரரான கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பையின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அ.இ.ம. காங்கிரஸ் கட்சி, அம்பாறை மாவட்டத்தில் புதிதாகக் களமிறங்கியிருக்கிறது. குறிப்பாக, ரிஷாத் இம்முறை அம்பாறை மாவட்டத்தில் களமிறக்கியிருக்கும் வேட்பாளர்களில் கணிசமானவர்கள் மு.கா.விலிருந்து பிரிந்து சென்றவர்கள், மு.கா. அதிருப்தியாளர்கள்.

எனவே, மு.கா.வின் வாக்கு வங்கியில் இவர்களால் சரிவினை ஏற்படுத்தக் கூடிய சாத்தியம் இருப்பதை அத்தனை இலகுவில் மறுத்து விட முடியாது.

ஆயினும், அம்பாறை மாவட்டத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கட்சிக்கு ஆசனங்கள் கிடைப்பதற்கான சாத்தியங்கள் இப்போதைக்கு பெரிதாகத் தெரியவில்லை. ஆனால், மு.காங்கிரஸுக்கு கிடைக்கும் ஆசனமொன்றை, ரிஷாத் கட்சியினரால் இல்லாமலாக்கி விடுவதற்கான சாத்தியங்கள் ஓரளவு தெரிகின்றன.

எது எவ்வாறாயினும், பொதுத் தேர்தல் நிறைவடையும் போது, அம்பாறை மாவட்டத்தில் எதிர்பாராத சில "இடி"கள் இறங்கப் போவது மட்டும் உறுதி.

# முற்பகல் ரென்சன் பிற்பகல் பருமன்



இளம் வயதில் சந்திக்கிற மன அழுத்தம் தரும் நிகழ்வுகள், பிற்காலத்தில் பெண்களின் உடல் எடையை அதிகரித்துவிடுவதாக அமெரிக்க ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அமெரிக்காவின் மிக்சிகன் மாகாணப் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் பேராசிரியர் ஹு லியு இந்த ஆய்வை நடத்தியுள்ளார்.

கடந்த 15 ஆண்டுகளாக, 16 வயதுக்குட்பட்ட 2259 பெண்களையும் 1358 ஆண்களையும் இந்த ஆய்வுக்கு அவர் உட்படுத்தியுள்ளார்.

குடும்பத்தில் யாராவது ஒருவர் இறந்துவிடுவது, அப்பா- அம்மா விவாகரத்துப் பெற்றுப் பிரிந்துவிடுவது போன்றவை பெண்களை அதிகம் பாதிக்கிறதாம். இந்த மன அழுத்தத்தின் காரணமாக பெண்கள் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடும் பழக்கத்துக்கு அடிமையாகி விடுகிறார்கள். அதனால்தான் அதிக உடல் எடை என்று அந்த ஆய்வு முடிவில் சொல்லியிருக்கிறார்கள்..

# நீயே கவிதைதான்!



மண்ணையும், சூரியனையும், பிராணிகளையும் நேசி! பணத்தை இலட்சியம் செய்யாதே; கேட்கிறவனுக்கெல்லாம் கொடு; அறிவில்லாத அவர்கள் சார்பாகவும், பித்தர்கள் சார்பாகவும் போராடு!

உன் வருமானத்தையும், உழைக்கும் சக்தியையும் பிறருக்காக செலவிடு; யதேச்சதிகாரிகளை வெறு; கடவுள் குறித்து வாதாடாதே!

மக்களிடம் பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்.

படிக்காத மேதைகளிடமும், தாய்மார்களிடமும் பழகு. பள்ளியிலோ, கோவிலிலோ, புத்தகத்திலோ, உனக்கு சொல்லப்பட்டவைகளை எல்லாம் மறுபரிசீலனை செய்.

உன் ஆன்மாவை, எதெல்லாம் அகௌரவப்படுத்துகிறதோ அதையெல்லாம் தள்ளிவிடு.

இப்படியெல்லாம் செய்தால், உன் சொற்கள் மட்டுமல்லாமல், உன் உதடு, முகம், கண்கள், உன் உடல் அசைவு ஒவ்வொன்றிலும் கவிதை வெளிப்படும்.

**('புல்லின் இதழ்கள்' தொகுப்பின் முன்னுரையில் வோல்ற் விட்மன்)**

# மனங்கவர்ந்த தீபிகா



ஒரு தொலைக்காட்சி நடிகைக்கு, இலட்சக் கணக்கான ரசிகர்கள் இருக்க முடியுமா? இருக்க முடியும் என நிரூபித்துள்ளார் தீபிகா சிங். ஒரு ஹிந்தி தொலைக்காட்சித் தொடரில் தீபிகா, சந்தியா என்கிற கதாபாத்திரத்தில் நடிக்கிறார். தனக்கு நேரும் துன்பங்கள் ஒவ்வொன்றையும் சமாளித்து அவர் வெற்றி கொள்ளும் விதம் மகளிர் அனைவரையும் ஈர்த்துள்ளது. இவரது கணவர் ரோகித் ராஜ் இத்தொடரின் இயக்குநர். தீபிகாவின் தொலைக்காட்சித் தொடர் "என் கணவன் என் தோழன்" என்ற பெயரில் தமிழில் வெளிவருகிறது.

பிரபஞ்சத்தில் வேறு கிரகத்தில் உயிர்கள் இருக்கிறதா என்பதை ஆராய

வேற்றுக்கிரக வாசிகள் இருந்தால் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் அவசியம் இல்லை. அவர்கள் எல்லா வளங்களும்

படத்தை இயக்கியிருக்கிறார். ஏ.ஆர். ரஹ்மானின் சகோதரி பாத்திமாவின் மகன் கே.ஆர் இசையமைப்பாளராக

கீதா"வானார். இடையில் ஒரு சில படங்களைத் தயாரித்து வந்த இவர், தற்போது "காவல்" படத்தின் மூலம்

அதாவுல்லா மட்டுமே முஸ்லிம். மற்றையவர்கள் சிங்களவர்கள்.

யிடும் ஒவ்வொரு அணியும் 10 வேட்

கட்சியுடன் கூட்டணியமைத்து தேர்தலில்

மட்டும் உறுதி.

பெயரில் தமிழில் வெளிவருகிறது.

# வேற்றுக் கிரகவாசிகளை கண்டறிய ஸ்டீபன் ஹொக்கிங் புதிய திட்டம்

பிரபஞ்சத்தில் வேறு கிரகத்தில் உயிர்கள் இருக்கிறதா என்பதை ஆராய ரூபா 1500 கோடியில் புதிய திட்டம் ஒன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானி ஸ்டீபன் ஹொக்கிங் தொடங்கியுள்ளார். இந்தத் திட்டத்துக்கு ரஷ்ய தொழில் அதிபர் யூரி மில்னர் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளார்.



வேற்றுக்கிரக வாசிகள் இருக்கிறார்களா இருந்தால் அவர்கள் எப்படி இருப்பார்கள் நம்மைப் போன்று இருப்பார்களா அல்லது சினிமாவில் காட்டப்படும் உருவங்களில் இருப்பார்களா இது போன்ற எண்ணற்ற கேள்விகள் நம் மனதில் உண்டு. வேற்றுக் கிரகவாசிகள் உள்ளார்களா என்ற கேள்விக்கு விஞ்ஞானிகள் கிட்டத்தட்ட ஆம் என்று பதிலளித்து உள்ளனர். பிரபஞ்சத்தில் பால்வெளி என அழைக்கப்படும் எண்ணற்ற நட்சத்திரக் கூட்டங்கள், பெரிய நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறும் போது உருவாகும் சிறிய நட்சத்திரங்கள், அவற்றைச் சுற்றி வரும் கிரகங்கள் அவற்றின் துணைக் கோள்கள் நிரம்பியுள்ளன. பிரபஞ்சத்தின் ஏதேனும் ஒரு மூலையில் பூமியைப் போன்ற உயிர்வாழ்வதற்கு ஏற்ற கிரகங்களும் அதில் உயிர்களும் இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக வான்வெளி விஞ்ஞானிகள் தொடர்ந்து நம்பிக்கை தெரிவித்து வருகின்றனர். ஆனால் வேறு கிரகத்தில் உயிரினங்கள் இருக்கின்றன என்பதற்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை.

தோமஸ் ஹேர் என்ற விஞ்ஞானி வேற்றுக் கிர வாசிகள் நமக்கு அருகிலோ, வெகு தொலைவிலோ நம்மைப் போலவே ஒரு கூட்டம் உயிர் வாழ்வதற்கான சாத்தியக் கூறும் இருக்கிறது. ஆனால், அவர்கள் உணவு சாப்பிட்டு, தண்ணீர் குடித்து நம்மைப் போலவே இருப்பார்களா என்பது சந்தேகம். அவர்கள் வேறு மாதிரியாக இருக்கவும் வாய்ப்பு உள்ளது. ஒருவேளை, அப்படி யாராவது எங்காவது இருந்தால் நம்மை கண்டுபிடிப்பதும் சிரமம் அல்ல. அவர்களது இடத்தில் இருந்து பயணிக்கத் தொடங்கியிருந்தால் 500 ஆண்டுகளிலேயே நம்மை அடைந்திருக்கலாம்.

அதுபோன்ற சம்பவம் இதுவரை நடக்கவில்லை. அதனால், அனேகமாக அதுபோல யாரும் இல்லாமல் இருக்கலாம். அல்லது, நம்மை கவனிக்காமல் அவர்கள் கடந்துபோயிருக்கலாம். அல்லது, எங்கும் பயணப்படாமல் அவர்கள் தங்கள் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பவர்களாகக்கூட இருக்கலாம். மேலும், வேற்றுக்கிரக வாசிகள் இருந்தால் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் அவசியம் இல்லை. அவர்கள் எல்லா வளங்களும் நிறைந்தவர்களாகத்தான் இருப்பார்கள். பூமியில் இருந்து தண்ணீரோ, வேறு எதுவுமோ அவர்கள் எதிர்பார்க்கப் போவதும் இல்லை. இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த விண்வெளி விஞ்ஞானி ஸ்டீபன் ஹொக்கிங், வேறு கிரகவாசிகள் இருக்கிறார்களா என்பதை அறிய புதிய திட்டம் ஒன்றை கடந்த வாரம் லண்டனில் தொடங்கியுள்ளார். இந்தத் திட்டத்துக்காக அடுத்த 10 ஆண்டு களில் ரூ. 1500 கோடி செலவழிக்கப்படும். ரஷ்யாவைச் சேர்ந்த சிலிகான் வேலி தொழில் அதிபர் யூரி மில்னர் இந்தத் திட்டத்துக்கு நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளார்.

இந்தத் திட்டம் குறித்து விஞ்ஞானி ஸ்டீபன் ஹொக்கிங் கூறுகையில், எல்லை இல்லாத இந்தப் பிரபஞ்சத்தில் வேறு உயிர்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் நிச்சயம் உள்ளன. பிரபஞ்சத்தின் ஏதேனும் ஒரு மூலையிலிருந்து அறிவுபூர்வமான உயிர்கள் நம்மை கவனித்துக் கொண்டிருக்கலாம். பிரபஞ்சத்தில் வேறு உயிர்கள் இருக்கிறதா என்ற கேள்வியைக் காட்டிலும் வேறு மிகப்பெரிய கேள்வி இருக்க முடியாது. இதற்கான விடையைத் தேட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார்.

இந்தத் திட்டம் வானத்தை 10 மடங்கு கவர் செய்கிறது. வேற்றுக் கிரகவாசிகளின் பரிமாற்றங்கள் கேட்க உலகில் மிக சக்தி வாய்ந்த இரண்டு ரேடியோ தொலைநோக்கி கள் முன்னணி விஞ்ஞானிகளைக் கொண்டு நிறுவப்படுகிறது. மற்றொரு தொலைநோக்கி மற்ற உலகங்களில் இருந்து வரும் லேசர் சிக்னல்களைத் தேடும். இந்தத் தொலைநோக்கிகள் மூலம் பூமியைத் தவிர மற்ற நட்சத்திரங்களில், கிரகங்களில், விண் வெளியில் வேறு ஏதாவது உயிரினங்கள் வாழ்கின்றனவா என ஆய்வு செய்யப்படும்.

அவுஸ்ரேலியாவில் நியூ சவுத் வேல்சில் 64 மீற்றர் (210 அடி) பார்க் தொலைநோக்கி மூலமும், மேற்கு வேர்ஜினியாவில் 100 மீற்றர் (328 அடி) பேர்ட் கிரீன் பாங்க் தொலைநோக்கியும் நிறுவப்பட்டு 10 ஆண்டுகள் கண்காணிக்கப்படும்.

# சினிமா சினிமா

❖ மேதில் தேவிகா, பாலக்காடு ராமநாதபுரத்தில், "ஸ்ரீபாதம்" என்ற நடனப் பள்ளி அமைத்து, நடனப் பயிற்சி அளித்து வரும் பரதநாட்டிய நடனக் கலைஞர். இவர், சமீபத்தில் மலையாள நடிகர் முகேஷை திருமணம் செய்துள்ளார். நடிகை சரிதாவும், முகேஷும் விவாகரத்து பெற்ற பின், ஏழு வயது ஆண் குழந்தையின் தாயான தேவிகாவை மணந்துள்ளார் முகேஷ். கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, விவாகரத்து பெற்ற தேவிகா, இரு வீட்டார் அனுமதியுடன் மறுமணத்திற்கு கழுத்து நீட்டியுள்ளார்.

❖ விஜய் இரசிகர் மன்றத் தலைவராக இருந்தவர், தற்போது, விஷால் இரசிகர் மன்றத் தலைவராகியிருக்கிறார். விளைவு, புலி படத்தின் படப்பிடிப்பு முடிந்த அன்று, யூனிட்டில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு, விஜய் தங்க நாணயம் பரிசளித்தது போன்று, தன், பாயும்புலி படத்தின் படப்பிடிப்பின் கடைசி நாளன்று, விஷாலும் தொழிலாளர்களுக்கு தங்க நாணயம் பரிசளித்துள்ளார்.

❖ தமிழில் "போக்கிரி", "எங்கேயும் காதல்" ஆகிய படங்களை இயக்கிய பிரபுதேவா, ஹிந்திக்குச் சென்று, அங்கேயும் அடுத்தடுத்து ஹிட் படங்களை இயக்கி முன்னணி இயக்குநர்களின் வரிசையில் சேர்ந்தார். சமீபத்தில் அவரின் உதவியாளர் லஷ்மண் இயக்கிய "ரோமியோ ஜூலியட்" படத்தைப் பார்த்துப் பாராட்டிய பிரபுதேவா, அப்படத்தை ஹிந்தியில் ரீமேக் செய்வதாகத் தெரிவித்துள்ளார். ஜெயம் ரவி, விஜய் சேதுபதி இருவரும் இணைந்து நடிக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

❖ விஜய் சந்தர் இயக்கத்தில் திரைக்கு வரவிருக்கும் வாலு படத்தில் சிம்பு வாய்திறந்தாலே பஞ்ச் வசனங்கள்தான் வந்து விழுகிறதாம். சாம்பிளுக்கு ஒன்று: "பொண்ணு அழகா இருக்காளேன்னு ஆசைப்படுறதுக்கு பேர் காதல் இல்லை. நம்ம வாழ்க்கையை அழகாக்குவாளான்னு நம்புறதுதான் காதல்"

❖ கமலின் நெருங்கிய நண்பரான ஓவியர் ஸ்ரீதர் கதை, திரைக்கதை அமைத்து தயாரிக்கும் படம் "மய்யம்." வெவ்வேறு துறை படிப்புகளைப் படித்துக் கொண்டிருக்கும் சினிமா ஆர்வமுள்ள பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்படத்தின் முக்கிய பொறுப்புகளை வகிப்பதுதான் இந்தப் படத்தின் சிறப்பு. மெக்கானிக்கல் இன்ஜினியர் படித்துக்கொண்டிருக்கும் ஆதித்யா பாஸ்கரன் படத்தை இயக்கியிருக்கிறார். ஏ.ஆர். ரஹ்மானின் சகோதரி பாத்திமாவின் மகன் கே.ஆர் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

❖ மலையாளத்தில், ஹவ் ஓல்ட் ஆர் யூ படத்தை அடுத்து, மம்முட்டியுடன் இணைந்து, என்றும் எப்பொழுதும் என்ற படத்தில் நடித்துள்ளார் மஞ்சுவாரியார். நடனத்தில் ஷோபனாவையே மிஞ்சும் அளவுக்கு ஆடியிருக்கிறார் என்றும், இப்படத்தில் அவரது நடிப்புக்கு தேசிய விருதுகள் கிடைக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளது... என்றும் கூறியுள்ளார் மம்முட்டி.

❖ ஆர்யா - அனுஷ்கா நடித்து வரும் "இஞ்சி இடுப்பழகி" படத்தில், "இஞ்சி இடுப்பழகி..." என்று ஆரம்பமாகும் பாடலுக்கு சிம்ரனைப் போலவே இடுப்பை பிரதானப்படுத்தி வளைந்து நெளிந்து ஆடியிருக்கிறாராம் அனுஷ்கா.

❖ மலேசிய வானொலியில் பிரபல தொகுப்பாளராக இருந்து பின்னர் "புன்னகை பூ" படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் கீதா. அதிலிருந்து "புன்னகை பூ கீதா"வானார். இடையில் ஒரு சில படங்களைத் தயாரித்து வந்த இவர், தற்போது "காவல்" படத்தின் மூலம் கதாநாயகியாகி இருக்கிறார். கதாநாயகன் விமல்.



❖ தமிழ், தெலுங்கு என, இரு மொழிகளிலும் எடுக்கப்படவிருக்கும் மணிரத்னத்தின் அடுத்த படத்தில் ஐஸ்வர்யா ராய், நாகார்ஜுனா, மகேஷ்பாபு மற்றும் ஸ்ருதிஹாசன் நடிக்கின்றனர்.

❖ சமீபகாலமாக, தமிழில், மாதவனை காண முடியவில்லை என்றாலும், ஹிந்தியில் அவர் நடித்து வெளியான, தனு வெட்ஸ் மனு ரிட்டர்ன்ஸ் என்ற படம், 225 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. ஏனைய பொலிவுட் கதாநாயகர்கள், மாதவனின் இச்சாதனையைக் கண்டு ஆடிப் போயுள்ளனர்.

❖ "என் திருமணம் நின்று போனதற்கு, சில நடிகர்கள் தான் காரணம்..." என்று தற்போது சொல்லியுள்ளார் த்ரிஷா. தெலுங்கு நடிகர் ராணாவுடன், தற்போது ஒட்டு, உறவு இல்லாமல் இருப்பதாக கூறப்படுகிறது.

❖ அரிமாநம்பி படத்திற்குப் பின், அப்பட இயக்குநர், விக்ரமை வைத்து இயக்கும், மர்ம மனிதன் படத்தில் கதாநாயகீ ப்ரியா ஆனந்த் அல்ல. பிந்துமாதவி குறுக்கு வழியில் வாய்ப்பை மடக்கி விட்டதாக, அவர் மீது, "கிசுகிசு" பரப்பி வருகிறார் ப்ரியா ஆனந்த்.

❖ தற்போது தெலுங்கில் காஜல், ஸ்ருதி போன்றவர்களுக்கு சவாலாக உள்ளார் ரகுல் ப்ரீத் சிங். அவர் மகேஷ்பாபுவுடன் நடிக்கும் "பிரமோத்சவம்" படத்தில் 2ஆவது ஹீரோயினாக சமந்தா நடிக்கிறார்.

❖ தேங்காய் சீனிவாசன் நடித்த, காசே தான் கடவுளடா என்ற படத்தை, ரீமேக் செய்யும் ஆர்வத்தில் உள்ளார் வடிவேலு.

❖ "கோமைா இருந்தாலும் என்னோடது" படத்தில், வில்லன் வேடத்தில் நடிக்கிறார் பவர்ஸ்டார் சீனிவாசன்.

❖ நீண்ட இடைவெளிக் குப்பின் ஜீவன் கதாநாயகனாக நடிக்கும் படம் "அதிபர்". ஜோடியாக புதுமுகம் வித்யா நடிக்கிறார்.

❖ தமிழில், ரஜினி மற்றும் அஜித்தை வைத்து படம் இயக்க ஆசைப்படுவதாக கூறியுள்ளார் பாகுபலி இயக்குநர் ராஜமவுலி.

❖ "நடிகை ஜனனி அய்யர் என் தோழி; அவருடன் எனக்கு காதல் இல்லை..." என்று தெரிவித்துள்ளார், அதர்வா.

## முரசின் இன்றைய பலன்

**26.07.2015 ஞாயிற்றுக்கிழமை**

மன்மத வருஷம் ஆடி மாதம் 10 ஆம் திகதி.
தசமி திதி / மரண யோகம்
விசாக நட்சத்திரம் முற்பகல் - 10.53 வரை பின் அனுசம்
இராகுகாலம் 4.32 - 6.02 வரை சுப நேரம் 9.02 - 10.32 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – வியாபாரப்பொருட்களின் தேக்க நிலை கவலையைத் தருதல்

**ரிஷபம்** – துப்புரவு செய்ய முற்பட்ட வேளை விஷப்பிராணிகளின் தாக்கமேற்படல்

**மிதுனம்** – தம்பதியர் மத்தியில் நிலவிய பிணக்கு மறைந்து விடல்

**கடகம்** – நீதிமன்றத் தீர்ப்பு சாதகமான முடிவினைத்தரலாம் என்ற நம்பிக்கை பிறத்தல்

**சிம்மம்** – அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்களினால் பணவரவுண்டாகலாம்

**கன்னி** – பொருத்தமில்லாத ஜாதகங்களை தரகர்கள் பொருத்த முற்படலாம்

**துலாம்** – மின் ஒழுக்கில் கவனம் எடுப்பதினால் சேதம் வராது விடல்.

**விருச்சிகம்** – தேவையற்ற பயணங்களைத், தவிர்த்தால் தேகநலம் பாதுகாக்கப்படல்

**தனுசு** – பணவரவுகளில் நிலவிக் காணப்பட்ட தடைகள் விலகி சுமுக நிலை ஏற்படல்


**மகரம்** – முழந்தவரை குடும்பத்தவர்களுடன் இணக்கமாக நடக்கப்பாருங்கள்

**கும்பம்** – விவாகமின்றி இருக்கும் முதிர் கன்னிகளை நினைத்து கவலை தக்க வைத்தல்

**மீனம்** – அநாமதேய தொலைபேசி மிரட்டலினால் அச்சமும் பதகளிப்பு ஏற்படல்

# மாற்றுவலுவுள்ளோரை மதித்து எம்மில் ஒருவராக நோக்க வேண்டும்

## வீரர்களை அனுப்பும் விழாவில் ஆ.நடராஜன்



(திருநெல்வேலி)

கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவர்கள் இருவரும் அமெரிக்காவிலிருந்து எந்தப் பதக்கங்களை இங்கு கொண்டு வந்தாலும் அவை எமக்குத் தங்கப் பதக்கங்களே. அவர்கள் கடவுளின் தங்கக் குழந்தைகள். எங்களுக்குச் செல்லக் குழந்தைகள் என இந்தியத்துணைத் தூதுவராலயத்தின் துணைத் தூதுவர் ஆறு முகன் நடராஜன் தெரிவித்தார்.

விசேட ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகருக்குச்செல்லும் சிவபூமிப் பாடசாலையின் மாணவர்கள் அ.மயூரன், ஜெ.மனோஜன் ஆகியோரை வழியனுப்பும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் பாடசாலையின் தனலட்சுமி தேவகாந்தன் மண்டபத்தில் அண்மையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரை நிகழ்த்திய அவர் வடகிழக்கு மாகாணம் பல வருடங்களாகப் பாதிக்கப்பட்ட இடங்களாக இருந்த போதும் விளையாட்டுத்துறையில் இம் மாணவர்கள் சாதித்திருப்பது மிகப் பெரும் சாதனையாகும்.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு எத்தனையோ மைல்கள் கடல் கடந்து சென்று அதுவும் பல்வேறு நாடுகளிலிருந்து வரும் வீரர்களுடன் போட்டி போடுவது என்பது சர்வ சாதாரணமான விடயமல்ல எனவும் கோண்டாவில் சிவபூமி பாடசாலையைப்பற்றி கேள்விப்பட்ட நாளிலிருந்து இப் பாடசாலைக்கு வர வேண்டும் என்பதில் நான் மிகவும் விருப்பு கொண்டிருந்தேன். இங்கு வந்த பின்னர் இதன் சிறப்பைக் கண்டு பூரிப்படைந்துள்ளேன்.

இங்குள்ள அதிபர்,ஆசிரியர், பணியாளர்கள் இப்பாடசாலை மாணவர்களின் வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறையைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இதன் நிறுவுநர் ஆறுதிருமுருகனை நூறுதிருமுருகன் என்று அழைப்பதே பொருத்தமானதாகும் அவரது பணி நிறை வானது உயர்வானது.

காது கேட்காதோரை செவிடர என்றும், வாய் பேசாதோரை ஊமை என்றும் க்ண் தெரியாதோரை குருடர் என்றும் நடக்க முடியாதோரை ஊனம் என்றும் நம்மவருள் சிலர் கூறி வந்த காலம் போய் அவர்கள் இன்று உலக நாடுகளில் உலக சாதனை செய்யும் வீரர்களாக மாறியிருப்பதைப் பார்க்கும் போது எமக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

மாற்று வலுவுள்ளோரை நாம் மதிக்க வேண்டும். அவர்களை சமூகத்தில் எங்களில் ஒருவராக இணைந்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு நிறைந்தளவு ஒத்துழைப்பு, ஒத்தாசைகளை வழங்க வேண்டும்.

வலுவிழந்தோரும் வாழப் பிறந்தவர்களே. அவர்களிடம் அதீத திறமைகள் உண்டு. அவற்றை வெளிக் கொணர்ந்து உலகின் சாதனை மன்னர்களாக அவர்களை உருவாக்க நாம் முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (137)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



யோகேஸ்வரி பற்குணராஜா
(யாழ்.மாநகர முன்னாள் முதல்வர்)



X 5

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# வீரர்களிடையே மோதல்

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடாத்திய உதைபந்தாட்ட இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் முடிவில் இரு அணி ரசிகர்களுக்கும் இடையே பெரும் மோதல் வெடித்ததால் பலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். வீரர் ஒருவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த மோதலால் அப்பகுதி பெரும் பதட்டமாக காணப்பட்டது. இரு அணிகளின் ஆதரவாளர்களும் எதிரணியினரைத் தேடித் தேடித் தாக்கினர். இதனால் பெரும் பதட்ட நிலை காணப்பட்டது.

# கைதடி முதியோர் இல்லத்திற்கு தென்கொரிய மாணவர்கள் விஜயம்

(திருநெல்வேலி)

தென்கொரியாவிலிருந்து 50 மாணவர்கள் கடந்த புதன்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு வருகை தந்தனர் அவர்கள் அங்குள்ள முதியோரகளுடன் கலந்துரையாடி அவர்களுடனான அனுபவப் பகிர்வுகளைப்பகிர்ந்து கொண்டதுடன் கூட்டுப்பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் சியோன் திருச்சபையைச் சேர்ந்த பெஞ்சமின், தேவராஜா அடிகளார் தென் கொரியாவைச் சேர்ந்த மாணவர்களை முதியோர் இல்லத்துக்கு அழைத்து வந்தார்.

காலை 9 மணியிலிருந்து பிற்பகல் ஒருமணி வரை நீடித்த இச் சந்திப்பின் மூலம் தாங்கள் உணர்வு பூர்வமான ஆத்மீக பலத்தைப் பெற்றுக் கொண்டதாக அம் மாணவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், கிளிநொச்சி மற்றும் வவுனியா வைத்தியசாலைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சிலர், முதியோர் பராமரிப்புப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை கைதடி முதியோர் இல்லத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

சுமார் 6 மணித்தியாலங்களாக இல்லத்தில் தங்கியிருந்து முதியோர்களை சந்தித்து உரையாடிய இவர்கள் அவர்களது ஆசிகளையும் பெற்றுக் கொண்டனர்.

அத்தோடு கடந்த 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினரால் உளவளத்துறைப் பயிற்சி நெறி முதியோர் இல்லத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சியை மையமாகக் கொண்ட 2 வருடப் பயிற்சியை உடைய இந் நிகழ்வில் சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரைக்கும் இப்பயிற்சி இடம்பெற்றது.

இதனைவிட, கொழும்பிலிருந்த விசேட விஜயத்தை இல்லத்துக்கு மேற்கொண்ட டாக்டர் சங்கர் முதியோருக்கான பல மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார். இவர் இலங்கையில் 6 முதியோர் இல்லங்களை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (137)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு சமூகத்தின் ஆதரவும் அவசியம்

## பெற்றோர் உருக்கமான வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பாலியல் துஷ்பிரயோகம், சமூகச்சீரழிவுகளுக்கு எதிரான போராட்டங்களில் எமது மக்கள் உணர்வுபூர்வ ஆதரவை வழங்கியது போன்று, தமது பிள்ளைகளின் விடுதலைக்கும் அனைவரும் ஒன்றுபட்டு ஆதரவை வழங்க அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியல் கைதிகளை பெற்றோரின் பெயரால் வெளியான துண்டுப் பிரசுரமொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் அனைவரையும் நம்பி ஏமாந்து போயுள்ளதாகவும் இப்போது விரக்தியடைந்த நிலையில் பிள்ளைகளின் விடுதலை வேண்டி நேரடியாக அனைவரிடமும் ஆதரவைக்கோரி நிற்பதாக அந்த துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

புதிய ஆட்சி மாற்றம் ஒன்றுக்காக இப்புதிய அரசினை வெற்றி பெறவைத்ததாகவும் எமது உறவுகளை எம்முடன் மீளவும் இணைக்க வழங்கிய வாக்குறுதிகள் எல்லாம் மறக்கப்பட்டு அவர்களின் விடுதலை மறுக்கப்பட்டு வருவதாகவும் அந்த பிரசாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில குறிப்பிட்ட தொகையினர் மாத்திரம் அரசியல் நோக்கத்திற்காக குற்றம் சுமத்தப்பட்டு பழிவாங்கப்படுவதாகவும் உண்மை நிலையை அனைவரும் அறியவேண்டுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 20 ஆண்டுகள் தண்டனை அனுபவித்து வரும் நிலையில் விசாரணைகள் இன்னும் நிறைவு பெறாத நிலையில் பிள்ளைகளையும் தாய், தந்தையரையும் சிறையில் தவிக்க விட்டு வலி சுமந்து வேதனையுடன் வாழ்வதாகவும் அந்த துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளது. (அ)




யாழ். நவாலி சென் பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் கல்விக் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றபோது...... (66)

# சைவத்தின் இருப்பை நிலைநிறுத்துவதில் இளையோரது பங்கு மிகமுக்கியம்

## செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்

(திருநெல்வேலி)

ஒவ்வெரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு தனித்துவம் இருப்பதைப் போன்று யாழ்ப்பாணத்தக்குச் சிவபூமி என்ற அடையாளமும் சைவசித்தாந்த தத்துவத்தைப் பேணும் பண்பும் தனித்துவமானவை. அதற்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் நம்மவர்களுடைய கடமையாகும். என கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி என வழங்கும் கண்ணகி அம்பாள் கோவிலின் சமய அறிவுப் போட்டிப் பரிசளிபபு விழா அண்மையில் ஆலய முன்றிலில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் ஜெ.ரதீபன் தலைமையில் நடைபெற்ற போது சிறப்புரை ஆற்றுகையிலேயே ச.லலீசன் இவ்வாறு தெரிவித்தார்.

அலர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது.

இன்று எங்கள் மண்ணில் சைவத்தின் இருப்புக் குறித்து சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன. சமய நிறுவனங்கள் கோவில் வழிபாடல்லாத வணகக முறைகளைப் பரப்ப முயல்கின்றன. இவற்றின் பிடிகளில் சிக்காது சைவசமயத்தைக் காப்பதில் இளைஞர் யுவதிகளது பங்கு முக்கியமானது.

மிக நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட பெயரில்லாத சமயத்திற்குச் சொந்தக்காரராக நாம் விளங்குகின்றோம். பெயரில்லாத நம் சமயத்திற்கு வெளிநாட்டவர் வைத்த பெயரே இந்து மதம் என்பதாகும். இதேபோல் தமிழ் மொழியும் மிகத் தொன்மையான மொழி ஆகும். மொழியும் சமயமும் எம்மிரு கண்கள் எனப போற்றி அவற்றைப் பேணுவதில் நாம் அக்கறை கொள்ள வேண்டும். அவை இந்த மண்ணில் எமது இருப்பிற்கான அடையாளங்கள் ஆகும். எம்மிடையே ஒற்றுமை குலைவுறுமானால் நாம் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லப்படுவோம்.

விரைவில் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் பிரதேசங்களில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைப் பார்ததால் தலை சுற்றுகின்றது. எங்களிடம் உள்ள ஒற்றுமைக் கேட்டைக் கண்டு எங்களைப் பிரித்தாளுவதற்று முயல்வோருக்கு இது நல்ல தருணம். பொது நலத்தைவிட சுயநலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதன் விளைவே இத்தகைய வேட்பாளர்களின் அதீத பெருக்கமாக அமைந்துள்ளது.

சமூக ஒழுக்கத்தை பேணுவதற்று சமய நெறி வழிகாட்டுகின்றது. அத்தகைய சமய விழுமியங்களை இளையோருடையே பரப்ப வேண்டும் என்ற நோக்குடன் சமய அறிவுப்போட்டியை ஏற்பாடு செய்து அதில பல நூறறுக்கணக்கானோரை பங்கேற்கச் செய்துள்ளீர்கள். என்னைப் பொறுத்தவரையில் சமய அறிவுப் பரீட்சைகளை நடாத்துவதனால் மட்டும் சமயம் வளர்ந்து விடாது. சமயம் என்பது வாழ்க்கை நெறியாக கடைப்பிடிக்க வேண்டும். அன்பு, அறம், அடக்கம் முதலான உயர் குணங்களை ஒருவர் தனது செல்வமாக கடைப்பிடிக்க வேண்டும் சமய வாழ்க்கை குறித்த விழிப்புணர்வு சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பிரசாரங்



களை இந்து இளைஞர் மன்றங்களும், இந்து மகளிர் மன்றங்களும் முன்னெடுக்க முடியும்.

மூத்தோர் ஆசி, குரு ஆசி இருந்தால் எந்தக் காரியமும் இலகுவில் கை கூடும். ஆசிர்வாதம் என்பதன் முக்கியத்துவத்தை பிள்ளைகள் உணர்ந்திருக்க வேண்டும். வாழ்க்கையில் இலகுவில் வெற்றி பெறுவதற்கு மூத்தோருடைய ஆசீர்வாதம் என்றும் துணை நிற்கும். சமய இலக்கியங்களும் இதை அழகுறப் போதிக்கின்றன என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி கலாநிதி ச.பாலகுமார் பிள்ளைகளிடம் காணப்படும் தாழ்வுச்சிக்கல்கள் அவர்களுடைய வெற்றிக்குத் தடையாகி விடுகின்றன. படிக்கும் போது ஏன்? எதற்கு, எப்படி? என வினாவி விளங்கிப் படிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்ட உயரப்புலம் மெ.மி.த.க பாடசாலை அதிபர் கு.திலீபன் வண்ணைஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் திருமதி சண்முகராஜா, யாழ். கல்லூரி இயக்குனர் என்.ரி.எஸ். சுகநாதன் ஏசியன் அக்கடமி ஆசிரியர் கோகலே, அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் க.தம்பிராசா ஆகியோர் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (137)

# கழிவகற்றும் தொட்டிகள் சங்கானையில் கையளிப்பு

(சங்கானை)

சங்கானை நகரப் பகுதியின் சூழலை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணும் முகமாக வேள்ட்விசன் நிறுவனம் முதற்கட்டமாக 15 தொகுதி பிளாஸ்ரிக் கழிவு தொட்டிகளை முன்னுதாரணமாக வழங்கியுள்ளது.

வேள்ட்விசன் நிறுவன முகாமையாளார் எவ்.அலெக்ஸ் ரொசமற்றும் பிரதேச சபை தவிசாளர் திருமதி.நா.ஐங்கரன் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் மூன்று வகையில் தரம் பிரிக்க கூடிய 15 பிளாஸ்ரிக் தொகுதிகள் சங்கானை வர்த்தக கழகத்தினரிடம் கையளித்தனர்.

உக்கக்கூடிய கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள், கண்ணாடி கழிவுகள் என மூன்றாக பிரிக்கக் கூடிய பிளாஸ்ரிக் தொட்டிகளே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் வேள்ட் விசன் ரிவோஸ் III நிறுவன முகாமையாளர் எவ்.அலெக்ஸ்ரொச், சபை உறுப்பினர்கள், பிரதேச சபை அலுவலர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொணட வேள்ட் விசன் நிறுவன முகாமையாளர் எவ்.அலெக்ஸ்ரொச் மேலும் தெரிவிக்கையில்,

சங்கானை உப அலுவலக பிரிவிற்கு உட்பட்ட வர்த்தக சமூகத்தின் நன்மைகருதி முதற்கட்டமாக 15 பிளாஸ்ரித் தொகுதிகளை வழங்குகின்றோம்.

இச் செயற்றிட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம் ஆகிய வர்த்தக தொகுதிகள் உள்ள சூழலுக்கும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஏனைய உப அலுவலகங்களுக்குமான பிளாஸ்ரித் தொட்டிக்கான முன்வரைவு பத்திரங்களை தவிசாளர் முன்வைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (92)

# மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி விபத்து

(பருத்தித்துறை)

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளா கியுள்ளனர்.

பருத்தித்துறை தும்பளை கிழக்கு முதலாம் கட்டையடியில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் தும்பளையைச் சேர்ந்த செ.கேதீஸ்வரன் (வயது 27), கு.சிறீதரன் (வயது30) ஆகியோரே விபத்தில் சிக்கி காயமடைந்துள்ளனர்.

இருவரும் மத்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிறீதரன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (18)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




(ஈ.பி.டி.பி. வலிகாமம் கிழக்கு இணைப்பாளர்)



X 2

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# வெடித்தது கருத்தியல் யுத்தம்



(கொழும்பு)

கண் மூடித்தனமான அரசியல் செய்வதற்கு நாங்கள் வெறும் கட்சிகளை மட்டும் கட்டிப்பிடித்துக் கொண்டு இருப்பவர்கள் அல்லர். எந்தப் பணியினை நாம் செய்ய ஆரம்பித்தாலும், அதில் சமூகத்தின் நன்மை, எதிர்காலம் என்பனவற்றை முன்னிறுத்தியே செயலாற்றுவோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும், முன்னாள் வடமேல் மாகாண அமைச்சர் எம்.எச்.எம்.நவவியின் வெற்றியினை உறுதி செய்யும் முதலாவது பிரசாரக் கூட்டம் புத்தளம் தில்லையடி அம்மார் மண்டபத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம் பெற்றது. இதன் போது அமைச்சரும், தேசிய தலைவருமான றிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு கூறினார்.


குருநாகல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் சார்பில் ஐக்கிய தேசிய கட்சியில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ரிஸ்வி ஜவாஹர்ஷா என்பவரது பெயரை அகற்றி அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பாளரான வைத்திய கலாநிதி ஷாபியின் பெயர் சேர்க்கப்பட்டதாகவும், இந்த வேலையினை நான் செய்ததாகவும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் கூறிவருகின்றார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க வருவதற்கு முன்னர், ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததுடன், ஐக்கிய தேசிய கட்சியுடன் நாம் உடன்படிக்கையொன்றினை செய்து கொண்டோம். அந்த உடன்படிக்கையில் எம்மால குறிப்பிடப்பட்ட சில மாவட்டங்களில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஆசன ஒதுக்கீடு தொடர்பிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனை திரிவுபடுத்தி மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை கொண்டு செல்வதானது அபத்தமானது என்பதை இவ்வாறு பேசுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

புத்தளம் மாவட்டத்தில் கடந்த 26 வருட காலமாக ஒரு முஸ்லிம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவமில்லை. ஒரு இலட்சத்துக்கு அதிகமான முஸ்லிம் வாக்குகள் இருந்த போதும் மக்களின் ஒற்றுமையின்மை மற்றும் கட்சி அரசியல் சார் சிந்தனைகளினால் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் எட்டாக்கனியாக இருந்துவருகின்றது.

வடக்கில் இருந்து நாம் வெளியேற்றப்பட்டு வந்த போது புத்தளத்து மக்கள் எமக்கு எல்லா வகையான உதவிகளையும் செய்தனர். அவர்களுக்கு எம்மால் ஆன அனைத்து உதவிகளையும் செய்வேன். ஆனால் கடந்த 5 வருட காலமாக என்



னால் புத்தளம் மக்களுக்கு எவ்வித அபிவிருத்திப் பணிகளையும் செய்ய முடியாமல் போனது அதற்கு உள்ளூர் அரசியல்வாதியின் செயற்பாடு காரணமாக அமைந்தது.

இனியும் இந்த புத்தள பகுதி மக்கள் அபிவிருத்திகளில் பின்தள்ளுவதற்கு இடமளிக்க முடியாது. சமூகத்தின் நன்மை கருதி இழக்கப்பட்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ளும் சாத்தியம் அதிகமாக இருபபதால் முன்னாள் அமைச்சர் நவவியை வேட்பாளராக நிறுத்தியுள்ளோம்.

எது எவ்வாறாக இருந்தாலும், இம்முறை புத்தளம் மாவட்ட மக்கள் தமது நாடாளுமன்றப் பிரதி நிதித்து வத்தை பெற்றுக் கொள்வார் கள் என்பதை மகிழ்வுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

# புதன் முதல் நடக்கும் விநியோகம்

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 10ஆம் திகதி வரை தபால் திணைக்களத்தால் வாக்காளர் அட்டைகள் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கப்படவுள்ளது. ஆகஸ்ட் 2 ஆம் திகதி மற்றும் 9ஆம் திகதி ஆகியன ஞாயிற்றுக்கிழமைகளாக இருக்கின்ற போதும் இரு தினங்களும் விசேட தினங்களாகக் கணிக்கப்பட்டு வாக்காளர் அட்டை விநியோகம் இடம்பெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.




# நடந்தது கொலை முயற்சியா?

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற நிகழ்வு ஒன்றில் அணிவகுப்பில் ஈடுபட்டிருந்த கடெற் மாணவரின் துப்பாக்கியில், ரவை ஒன்று சிக்கியிருந்ததை, ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் கணடறிந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கம்பகா பண்டா ரநாயக்க கலலூரியில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வில் மைத்திரிபால சிறிசேன பங்கேற்றிருந்தார். அவருக்கு கடெற் மாணவர் படையினரின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

அந்த அணிவகுப்பில் பங்கேறறிருந்த மாணவர்கள் பயன்படுத்திய துப்பாக்கிகள் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் சோதனையிடப்பட்டது.

அப்போது, ஒரு துப்பாக்கியில், ரவை ஒன்றின் பாகம் சிக்கியிருப்பது கண்டறியப்பட்டது. உடனடியாக அந்தத் துப்பாக்கியில் இருந்து ரவையின் பாகம் அகற்றப்பட்டது.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# பெருமந்தத்தில் இருந்து வடக்கு மீட்சி பெற சிந்தித்து வாக்களியுங்கள்!

**வடக்கில் வாழும் மக்கள் நஞ்சுவட்ட சூழலில் இருந்து மீட்சி பெற ஆகஸ்ட் 17 தேர்தலை முழுமையாக ஒவ்வொருவரும் வாக்களியுங்கள்**

வடக்கு – கிழக்கில் கடந்த மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற மிகக்கொடூரமான போர் இடம்பெற்று 2009 மே 19 ஆம் திகதி நிறைவேறியது.

தற்போது மேலதிகமாக 6 ஆண்டுகள் முடிவுற்று வடக்கு – கிழக்கு மாகாணங்கள் அமைதி நிலைக்கு திரும்பியுள்ளன.

எனினும் வடக்கின் முழுநிறைவான அபிவிருத்தி என்பது இதுவரை எய்தப்படாத பூச்சிய நிலையே இங்கு உணரப்படுகிறதாக பொருளாதார நிபுணர்களும் (economist) சமூகவியல் அறிஞர்களும் புடமிட்டு காட்டியுள்ளனர்.

ஒரு பிரதேசம் போர் சூழலுக்கு அகப்பட்டு பின்னர் முடிவுக்கு வரும் போது போர் சூழலில் மந்த நிலைக்கு தள்ளப்பட்ட பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

ஆனால் எமது வடக்கு பிரதேசத்தில் யு–9 பிரதான வீதியும், யாழ்.போதனா வைத்திசாலையும் மற்றும் இதர உட்கட்டு மானங்களும் இடம்பெற்றன என்பது தான் உண்மை.

வடக்கில் 5 மாவட்டங்கள் இந்த போர் சூழலில் கடந்த 30 வருடம் அகப்பட்ட பிரதேசம். இதில் வடக்கு – கிளிநொச்சி – முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்கள் முற்றாக அழிவடைந்த தேசங்களாகும்.

இதனால் கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி மற்றும் இதரதுறைகள் முற்றாக இந்த மாவட்டங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் பெருமளவிலான உயிர்ச்சேதங்களையும் (40 ஆயிரம்), உடமை இழப்புக்களையும், உட்கட்டுமான இழப்புக்களையும், அவயவங்கள் இழப்பினையும் கொண்டமைந்த மாவட்டமாக இனம்காணப்பட்டன.

இன்றும் மேற்படி கிளிநொச்சி – முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதான வீதிகளில் கடைகள், கோபுரங்கள் மட்டும் எழும்பியுள்ளதே தவிர இன்னும் அம்மக்கள் நிம்மதியற்ற 'வறுமைச் சூழலிலேயே' வாழ்கின்றனர்.

இதனை அண்மையில் வந்திருந்த ஐ.நா. அதிகாரிகள் மூவர் புள்ளிவிபரங்கள் ஊடாக இப்பிரதேசத்தின் தாக்கத்தினை அறிந்து ஊடகங்களுக்கும் வெளிப்படுத்தி சென்றுள்ளனர்.

இதனைவிட பெருமளவிலான இளைஞர், யுவதிகள் இலங்கைச் சிறைகளிலும், இந்திய சிறைகளிலும் ஏதோவொரு காரணங்களினால் அகப்பட்டு செய்வதறியாது உள்ளனர். மிக வேதனையில் உள்ளனர்.

இதனைவிட வன்னி போரில் அகப்பட்டுக் கொண்ட பல நூற்றுக் கணக் கானவர்களும் இன்றும் சிறைகளில் கண்ணீரும் – கம்பலையுமாக உள்ளனர்.

எனவே உண்மையான வடக்கின் அபிவிருத்தி சூழல் என்பது சகல துறைகளிலும் வெளிப்படைத்தன்மையான அபிவிருத்தி இனங்காணப்படவேண்டும்.

மக்கள் மீண்டும் மீண்டெழுந்த நிலைக்கு தள்ளப்படவேண்டும். இதனை இங்கு உள்ள உளளூராட்சி பிரதிநிதிகள், மாகாண பிரதிநிதிகள், நாடாளுமன்ற பிரதிநிதிகள், அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் நல்லாட்சி அரசாங்க தலைவருக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

இவ்வாறான ஒரு சூழல் ஏற்பட்டு விவசாயம் – கல்வி – மீன்பிடி – உட்கட்டுமானம், சுகாதாரம் உட்பட்ட துறைகளில் பெருவெழப்பான மீள்புரட்சி பசுமைப்புரட்சி ஏற்படச் செய்தால் மட்டுமே இந்த வடக்கு மாகாணம் மீள் எழுப்பும்.

இல்லாவிடில் இந்த மக்களை காப்பாற்ற எவரும் முடியாத சூழலுக்குள் தள்ளப்பட வேண்டிய அவல நிலைக்கு யாவரும் தள்ளப்படுவோம்.

கடந்த 6, 7 வருடங்களாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தேசத்தின் மகுடம் (Dayata Kirula) கண்காட்சியூடாக வருடத்திற்கு ஒரு மாவட்டம் பெரு அபிவிருத்திக்கு ஊடாக முன்னுக்கு கொண்டுவரப்பட்டது.

அதேபோல கிளிநொச்சி – முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒன்றையாவது தேசத்தின் மகுடம் கண்காட்சியூடாக மாவட்ட அபிவிருத்தியை முன்னெடுக்குமாறு இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பலகோரிக்கைகளை முன்வைத்தனர்.

ஆனால் எதுவும் இங்கு இடம் பெறவில்லை, அனுமதிக்கப்படவுமில்லை.

எனவே தற்போதைய நல்லாட்சிக்கு பலமாக எதிர்வரும் 17 ஆம் திகதி பலமிக்க நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது.

மக்கள் நலனில் உண்மையான அபிவிருத்தியின் பங்காளிகளை மக்களை நேசிக்கின்றவர்களை தெரிவு செய்யவேண்டும்.

இதன்மூலம் உருவாகின்ற வடக்கின் பெரும் தலைவர்களான நாடாளுமன்ற பிரதேசத்தை மீட்டு அனைத்து மக்கள் வாழ்விலும் சுபீட்சத்தை ஏற்படுத்த முனைய வேண்டும்.

எனவே அன்பார்ந்த தமிழ் மக்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், போலியானவர்களுக்கும், வருமானம் திரட்டுபவர்களுக்கம். உழைப்பவர்களுக்கும் இந்த தேர்தலில் பாடம்புகட்டி சமூகத்தின் மீதும் மக்களின் மீதும் அயராத சேவை புரிகின்ற தொண்டர்களை நேசியுங்கள், அவர்களுக்கு வாக்களியுங்கள் அதுவே எதிர்கால வடக்கின் அபிவிருத்திக்கு உண்மையாக கைகொடுத்து உதவும்.

எனவே ஒவ்வொரு வாக்கு சீட்டையும் ஒரு கணம் சிந்தித்து – செயற்படுங்கள். வடக்கு அபிவிருத்தி நல்லாட்சி அரசுடன் ஒன்றிணையும். அதுவே ஜதார்த்த தீர்வுக்கும் வழிவகுக்கும்.

அடுத்த 2020 இற்குள் இலங்கையின் வடக்கு மாகாணம் ஒரு சிறிய சிங்கப்பூராக மாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படுங் கள்.

சுபம்

செல்.ராணி
கிளிநொச்சி

03..



01. 02. 03. 04.



(10) சரியான விடையின் கீழ் கோடிடுக

01. ஒருவர் தனது வீட்டை 2005ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி கட்ட ஆரம்பித்து மார்ச் மாதம் 10ஆந் திகதி கட்டி முடித்தார். இவர் எத்தனை நாட்களில் வீட்டைக் கட்டி முடித்தார்?
01. 54  02. 55  03. 56  04. 61

02. 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி வியாழக்கிழமையும் எனில், 2009ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி என்ன கிழமை?
01. புதன்  02. வியாழன்  03. வெள்ளி  04. சனி

(11) பின்வரும் தொடர்வாக்கியங்களின் கருத்தை தனிச்சொல்லில் எழுதுக

01. ஒருவர் எழுதிய புத்தகத்திற்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை ..............................

02. ஒருவர் வைத்தியரின்றி தாமே தமது நோய்க்கு செய்யும் மருந்து ..............................

03. ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன் ..............................

(12) அண்மைக்காலமாக தமிழுக்கு புதிதாக அறிமுகப்படுத்திய கலைச்சொற்களை எழுதுக

01. முச்சக்கரவண்டி ..............................  02. வயது ..............................

03. தொலைக்காட்சி ..............................  04. அகதி ..............................

(13) பின்வரும் சுருக்கக் குறிகளின் கருத்தை எழுதுக

01. இ.பெ.கூ ..............................  03. இ.மி.ச ..............................

02. இ.ஒ.கூ ..............................  04. இ.போ.ச ..............................

(14) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 01ஆம், 02ஆம், 03ஆம் வினாக்களுக்கு விடை தருக

ஒரு காட்டில் மிருகங்களும் பறவைகளும், ஒற்றுமையாக வாழ்ந்தன ஒரு நாள் நாடுகளை சுற்றிப் பார்த்து வந்த குரங்கு காட்டிலுள்ள விலங்குகளிடம் பின்வருமாறு கூறியது. நாட்டில் வாழும் மனிதர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு மடிகின்றனர். ஆனால் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றோம். எங்களைப் பார்த்தாவது மனிதன் ஒற்றுமையுடன் வாழக் கற்றுக்கொள்ளக் கூடாதா? என ஏக்கத்துடன் கூறியது

01. இதிலுள்ள உயர்திணை, பன்மை, தன்மைச்சொல் ஒன்றை எழுதுக
..............................

02. இதிலுள்ள உயர்திணை, பன்மை, படர்க்கைச்சொல் ஒன்றை எழுதுக
..............................

03. இதிலுள்ள அஃறிணை, ஒருமை, ஒன்றன்பால் சொல் ஒன்றை எழுதுக
..............................

நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 01. I | 02. III | (02) 03. II | 04. II | (03) 05. I |
| 06. III | 07. II | 08. III | 09. III | 10. II |
| 11. III | 12. III | (04) 13. III | 14. III | 15. II |
| (05) 16. II | 17. II | 18. II | 19. III | 20. III |
| (06) 21. I | 22. III | 23. III | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015  பகுதி - I  1 மணி 15 நிமிடம்


# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க


(01) 01ஆம் 02ஆம் வினாக்களிலுள்ள உருக்களில் ஒன்று ஏனைய உருக்களில் இருந்து வேறுபட்டிருக்கும், வேறுபட்டிருக்கும் உருவில் கீழ் கோடிடுக

01.



(1) (2) (3) (4)

02.



(1) (2) (3) (4)

(02) தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

01. இலங்கையில் தேங்காயின் விலை அதிகரிக்கப்பட்டது இதனால் ஏற்படக்கூடிய விளைவு எது?
01. இலங்கையில் தெங்கு உற்பத்தி அதிகரிக்கும்
02. இலங்கை வெளிநாடுகளிலிருந்து தேங்காயை இறக்குமதி செய்யும்
03. தேங்காயிலிருந்து உற்பத்தி செய்யும் பொருட்களின் விலையும் அதிகரிக்கும்
04. உள்நாட்டில் தேங்காய் பாவனை குறைவடையும்

02. இலங்கையில் நீரேந்து பிரதேசங்களில் நீண்டகாலம் மழை பெய்யாது விடில், ஏற்படக்கூடிய விளைவு
01. நீர்த்தேக்கங்கள் முற்றாக வற்றிவிடும்  02. வரட்சியினால் பயிர்கள் வாடி இறந்துவிடும்
03. சிலவேளை மின்சாரத்தடை ஏற்படலாம்  04. மக்கள் குடிநீருக்காக அவஸ்தைப்பட நேரிடும்

03. சில மாணவர்கள் மெழுகுவர்த்தியினை ஒளிர வைத்தனர். ஒரு மெழுகுவர்த்தி 45 நிமிடங்கள் ஒளிரும் இவ்வாறான 5 மெழுகுதிரிகளை ஒரே நேரத்தில் எரிய வைத்தால் 5 மெழுகுவர்த்திகளும் எவ்வளவு நேரம் எரியும்
01. 45 நிமிடங்கள்  02. 90 நிமிடங்கள்
03. 3 மணி 15நிமிடங்கள்  04. 3 மணி 45 நிமிடங்கள்

(03) விமலன், கமலன், விபுலன், கபிலன் ஆகியோர் 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியை நிறைவு செய்த நேரஅளவு கீழே கட்டங்களினுள் தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

| விமலன் | கமலன் | விபுலன் | கபிலன் |
|---|---|---|---|
| 7.20 செக் | 6.59 செக் | 5.23 செக் | 8.46 செக் |

01. போட்டியை முதலில் நிறைவு செய்தவருக்கும், இறுதியில் நிறைவு செய்தவருக்கும் இடையேயுள்ள கால அளவு யாது?
01. 43 செக்  02. 45 செக்
03. 47 செக்  04. 48 செக்

02. ஓட்ட நிகழ்ச்சியை நிறைவு செய்த ஒழுங்கை சரியாகக் காட்டும் விடை எது?
01. விமலன், கமலன், கபிலன், விபுலன் 02. விபுலன், கமலன், கபிலன், விமலன்
03. விமலன், கபிலன், கமலன், விபுலன் 04. விபுலன், கபிலன், கமலன், விமலன்

**(04)** 01ஆம், 02ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கூடுகளில் குறுக்காகவும், மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்களைக் கொண்ட மூன்று சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

01.

| | | |
|---|---|---|
| | ஞ் | சி |
| | டி | மை |
| | தா | ரி |


01. ப கு ப 02. இ க ஊ 03. க அ ஏ 04. போ அ ஊ

02.


| | | |
|---|---|---|
| பு | | ர் |
| வ | | று |
| ம | | தி |

01. கா ற் ற 02. த ய ந் 03. தி யி ந் 04. க் லி ற


**(05)** மரக்குற்றிகளை அடுக்கி அமைக்கப்பட்டுள்ள உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன இதனைப் பயன்படுத்தி 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு விடை தருக




01. உருவை A திசையிலிருந்து பார்க்கும் போது தோன்றும் விதம் எது?




02. உருவை B திசையிலிருந்து பார்க்கும் போது தோன்றும் விதம் எது?




**(06)** 01ஆம், 02ஆம் வினாக்களில் ஐந்து நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன. இந்நிகழ்வுத் தொடர்புகள் குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றைக் காட்டுகின்றது அவை சரியான ஒழுங்குமுறையில் தரப்படவில்லை இந் நிகழ்வுகளை ஒழுங்கு முறைப்படுத்தும் போது கிடைக்கும் சரியான விடை எது?

01. பெற்றோரின் பாதங்களை வணங்கிய பின்னர் ஒரு சிறு பிள்ளை பாடசாலை செல்லப்புறப்படும் ஒரு நிகழ்வு ஒழுங்கின்றி காணப்படும் விதம்
A - சீருடையை அணிதல் B - புத்தகத்தை தயார்படுத்தல்
C - அதிகாலையில் எழுதல் D - பெற்றோரின் பாதங்களை வணங்குதல்
E - முகம் கழுவுதல்



01. CBEAD 02. CEBAD 03. DABEC 04. DBAEC

02. பாடசாலை விழா ஒன்றுக்கான நிகழ்ச்சி நிரல் பற்றிய ஒழுங்குகள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன
A - அதிபரின் உரை B - வரவேற்புரை
C - நன்றியுரை D - அதிதிகள் வருகை
E - பரிசில் வழங்குதல் F - பிரதம அதிதியின் உரை
01. ADBEFC 02. BADEFC 03. DBAFEC 04. DABFEC

03. சதாவும், சுதாவும் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு ஒவ்வொருவரும் எதிர் எதிர்த்திசையில் 200 மீற்றர் தூரம் சென்றனர். பின்னர் சதா வலது புறம் திரும்பி 200மீற்றர் தூரம் சென்றாள். அதேபோல சுதா இடதுபுறம் திரும்பி 100 மீற்றர் தூரம் சென்றாள் எனின் இருவருக்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு?
01. 200மீற்றர் 02. 300 மீற்றர் 03. 400 மீற்றர் 04. 600 மீற்றர்

**(07)** 01ஆம், 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்கள் யாவை?

01.
8 4 1
3 .. 9
4 .. 2

01. 4 7 02. 5 6 03. 5 8 04. 8 5

02.
5 6 2
4 .. 5
9 .. 7

01. 2 7 02. 1 8 03. 3 4 04. 3 9

**(08)** முதலாம் தவணைப்பரீட்சையில் கணித பாடத்திற்கு தோற்றிய மாணவர்கள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரங்கள், இதனைப் பயன்படுத்தி 1முதல் 2வரையான வினாக்களுக்கு விடை தருக


* கீதா இராணியை விட 10 புள்ளிகள் கூடுதலாகப் பெற்ற போதும், சுதாவை விட 15 புள்ளிகள் குறைவாகப் பெற்றாள்
* சுதா, சதாவை விட 12 புள்ளிகளை அதிகமாக பெற்றாள்
* சதா பெற்றுக் கொண்ட புள்ளிகள் 72 ஆகும்

01. இதில் அதிக புள்ளியைப் பெற்ற மாணவர் யார்?
01. சதா 02. சுதா 03. இராணி 04. கீதா


02. மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இறங்குவரிசைப்படுத்தும் போது கிடைக்கும் விடை
01. கீதா, இராணி, சுதா, சதா 03. இராணி, கீதா, சதா, சுதா
02. சுதா, சதா, கீதா, இராணி 04. கீதா, சுதா, இராணி, சதா

**(09)** 01ஆம், 02ஆம், 03ஆம் வினாக்கள் முதலில் தரப்பட்டுள்ள மூன்று உருக்களிடையே ஏதாவதொரு பொது இயல்பு அடிப்படையில் தொடர்பு இருக்கும் இந்த மூன்று உருக்களுடன் தொடர்புடைய இன்னொரு உருவின் கீழ் கோடிடுக


01.




01. 02. 03. 04.




02.



01. 02. 03. 04.



# தேர்தல் களம் 2015





வடமராட்சி திக்கம் மடுமாதா கோவலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா வழிபாட்டில் கலந்துகொண்டார்.

நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதியில் தேர்தல் பரப்புரைகளுக்காக வடமராட்சிக்கு சென்றிருந்த செயலாளர் நாயகம் மடுமாதா கோவலில் இடம பெற்ற பூசை வழிபாட்டில் கலந்துகொண்டார். இதன்போது ஈ.பி.டி.பியின் வேட்பாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் உடனிருந்தார்.

## அடிப்படைப்பிரச்சினைகளுக்கு எட்டப்பட்டது பொருத்தமான தீர்வுகள்

கடந்த நான்கு ஆண்டு காலத தில் வலி.மேற்கு பிரதேச சபைக குட்பட்ட பொதுமக்களின் பிரச் சினைகள், குறைகளுக்கு உடனுக குடன் தீர்வு வழங்கப்பட்டது.

இதன் மூலம் 25 கிராம அலுவலர் பிரிவிலும் இரண்டா யிரத்து 701 பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுத்துள்ளார். வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவரும் ஈ.பி.டி.பி. வலிகாமம் இணைப் பாளர் 2015 நாடாளுமன்ற வேட்பாளருமான சிவகுரு பாலகிருஷ்ணன்.

வலி.மேற்கு மக்களுக்கான உதவிகளும் - பிரச்சினைக்கான தீர்வுகளும் எனும் தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

மக்களுக்கு உண்மையான - ஜதார்த்தமான சேவைகளை நாம் கடந்த நான்கு ஆண்டுகளின் செய்துள்ளோம் தற்போதும் சேவைப்பணிகள் தொடருகின்றன.

நாம் வலி.மேற்கில் எமது தலைவர், செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஊடாக பல்வேறு பிரச்சினைகள், குறை களுக்குத்தீர்வு கண்டுள்ளோம்.

இதனைவிட யாழ்.குடா நாட்டில் பல்வேறு பிரச்சினைக ளுக்கும் நாம் முன்னின்று சேவை யாற்றி உள்ளோம்.


மேலும் விதவைகள், கைதிகள், வேலை வாய்ப்பற்ற இளைஞர் - யுவதிகள், வாழ்வாதார உதவி தேவைப்படும் வறிய குடும்பத்தினர், கைத்தொழில் உதவி தேவைப்பட்டோர் என நூற்றுக்கணக்கானவர்களின் பிரச்சினைகளை மாவட்ட மட்டத் தில் தீர்த்து வைத்துள்ளோம்.

உண்மையான சேவையா



ளர்களை இந்த மக்கள் உண ருவர், நாம் வீடு வீடாகச்செல்ல வேண்டிய தேவையில்லை.

அனைத்து வலி.மேற்கு மக்களும் எமக்கு கைகோர்த்து உதவி நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெறச் செய்ய வேண் டும் எனஅச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (92)



உடுப்பிட்டியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ தேவானந்தா விஜயம்செய்து வர்த்தகர்களுடன் கலந்துரையாடினார்.

வடமராட்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம கடைத்தொகுதிகளுக்கும் சென்றிருந்தார்.


இதன்போது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அமைந்துள்ள வல்வெட்டித் துறை வீதியில் உள்ள கடைத் தொகுதிகளுக்கும் சென்று கடை உரிமையாளர்களுடனும், பொருட்களைக் கொள்வனவு செய்ய வருகை தந்திருந்த மக்களுடனும் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கடை உரிமையாளர்கள் டக்ளஸ் தேவானந்தாவை இன்முகத் துடன வரவேற்றனர். இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி பிரதேச அமைப்பாளரும், வேட்பாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் உடனிருந்தார்.

பருத்தித்துறை துறைமுக வைரவர் கோயில் சிறப்புப்பூசை வழிபாட்டில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா பங்கேற்று சிறப்பித்துள்ளார்.

வடமராட்சிக்கு நேற்று முன்தினம் தேர்தல் பரப்புரைக்காக விஜயம் செய்திருந்த செயலாளர் நாயகம் கோயிலில் இடம்பெற்ற சிறப்புப் பூசை வழிபாட்டில் கலந்துகொண்டார்.

இதனிடையே கோயிலுக்கு வருகை தந்திருந்த மக்கள் செயலாளர் நாயகத்தை இன்முகத்துடன் வரவேற்றிருந்தனர்.



## கடற்றொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் டக்ளஸ் தேவானந்தா

### பாஷையூரில் இரா. செல்வவடிவேல் உரை



எமது தொழிலாளர்கள் கட லில் இறங்க முடியாத சூழலை எதிர்கொண்ட போது அவர்க ளின் கடற்றொழிலுக்கு வகை செய்து அம் மக்களின் வாழ் வில் ஒளியேற்றியவர் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா என இரா.சேல்வவடிவேல் தெரிவித்தார்.

இம்முறை பொதுத் தேர்த லில் ஈ.பி.டி.பி.யின் வீணைச் சின்னத்தில் களமிறங்கியுள்ள இரா.செல்வவடிவேல், பாஷை யூரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும் போது, மேலும் கூறி யதாவது,

இந்த கரையோர கிராமத்தில் வாழ்கின்ற ஏழை மீனவர்களை கடலுக்குள் இறங்க விடாமல் கடற்பாதுகாப்புத் தடைச்சட்டத் தின் கீழ் அரசாங்கம் அறிவித்த போது அதனைத் தடுத்து ஏழை மீனவர்களைக் கடலுக்குள் இறங்க வைத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியவர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர்.

கடலம்மா எங்களுக்கு நீதி சொல்ல எவரும் இல்லையா? என மக்கள் கலங்கிய போது அந்த மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி இந்திய மீனவர் களின் அத்துமீறல்களைக் கட் டுப்படுத்தி மீனவர்கள் முழுநாளும கடலில் தொழில் செய்கின்ற வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக கொடுத்தவர் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா.

இன்று அவர் தலைமையில் நாங்கள் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுகின்றோம்.

மணியந்தோட்டத்தில் இருந்து பருத்தித்துறை முனை வரை யுள்ள கரையோரக் கிராமங்கள் அனைத்தையும் கேட்டுப்பாருங் கள் அங்கேயுள்ள ஒவ்வொரு குடிசையிலும் டக்ளஸ் நாமம் ஒலிக்கும். கடற்றொழிலாளர்க ளின் கடலுணவுக்குரிய விலை சரியான முறையில் நிர்ணயம் செய்யப்படும். அவர்களுக்குரிய மானியம் அதிகரிக்கப்படும். ஏற் றுமதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். கருவாடாக்கும் முறைக்கு நவீன முறையில் வசதிகள் மேற்கொள்ள அரச உதவி பெற்றுத்தரப்படும்.

இவை யாவும் நடைபெற வாக்களிப்பீர் வீணைக்கு என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் பாஷை யூரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்

(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)



X 1

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில்
போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை
வெற்றி பெறச் செய்வோம்!
X
4
சில்வேஸ்திரி அலென்ரின்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
8
ஐயாத்துரை ஶ்ரீரங்கேஸ்வரன்
(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
1
டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.)
முதன்மை வேட்பாளர்
இராமநாதன் ஐங்கரன்
(வலிகாமம் கிழக்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
2
முருகேசு சந்திரகுமார்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
7
பசுபதி சீவரத்தினம்
(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)
6
'சொல்லின் செல்வர்'
இரா.செல்வவடிவேல்
3
சிவகுரு பாலகிருஸ்ணன்
(வலிகாமம் மேற்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
9
திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா
(யாழ்.மாநகர முன்னாள் முதல்வர்)
5
சூசைமுத்து அலெக்ஸாண்டர்
(தென்மராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
10
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# மகாதேவா சுவாமிகள் இல்ல சிறுவர்கள் கல்வி, விளையாட்டு துறைகளில் சாதிப்பவர்கள்

## சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

மகாதேவா சுவாமிகள் இல்ல சிறுவர்கள் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு, கலை, கலாசார மற்றும் பிற நிகழ்வுளிலும் சாதனை படைத்து வருகின்றனர்.

இங்குள்ள மாணவர்கள் எதிர் காலத்தில் இந்த மண்ணில் சிறந்த கல்விமான்களாக வருவதற்கான சூழலில் வளர்க்கப்படுவதனை நான் அறிவேன்.

இவ்வாறு வடக்கு மாகாண சகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

மகாதேவ சுவாமிகள் இல்ல தலைவரும் முன்னாள் அரச அதிபருமான திருநாவுக்கரசு இராசநாயகம் தலைமையில் சுவாமிகள் இல்ல பிள்ளைகளின் பிறந்த நாள் வைபவம் கிளிநொச்சி ஜெயந்தி நகரில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திமகாதேவ சுவாமிகள், இல்ல சிறுவர்களின் கடந்த 15 ஆண்டகால வளர்ச்சி அபிவிருத்தியினை நான் நன்க அறிவேன்.

இங்கு சேர்க்கப்படும் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் ஏதோவோரு விதத்தில் திறமைசாலியாக உருவாக்கப்படுகின்றனர்.

பல மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றுள்ளனர். இன்றும் பல மாணவர்கள் தேசிய ரீதியில் இடம் பிடித்த பல்கலைக்கழக கல்வியைப் பெறுகின்றனர். இவ்வாறாக ஒவ்வொரு மாணவனும் சிறந்த பண்படைய கல்வி ப்யனாளிகளாக மாற்றம் பெறத்தக்க வகையிலே வளர்த்தெடுக்கப்படுகின்றனர். இவ்வாறாக பெருவளர்ச்சிக்க வித்திட்டவர் வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளரும் முன்னாள் கிளிநொச்சி அரசாங்க அதிபரும்.தற்போதைய மகாதேவ சுவாமிகள் இல்ல தலைவரமான தி.இராசநாயகம் என்றால் மிகையாகபது என்றார்.

இந் நிகழ்வில் பிறந்த நாள் வைபவத்தை எதிர் கொண்ட மாணவர்களுக்கான சிறப்பு பரிசில்களை சகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் வழங்கியிருந்தார். (92)

# வடக்கு அதிவேக வீதியின் மருங்குகள் குறைப்பு

## அரசு மீது குற்றச்சாட்டு

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம், வடக்கு அதிவேக பாதைக்காக திட்டமிட்டிருந்த மருங்குகளின் எண்ணிக்கையை தற்போதைய அரசாங்கம் தமது திட்டத்தில் குறைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் தனஸ்ரீ அமரதுங்க இந்த குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

ஏற்கனவே மகிந்த அரசாங்க திட்டத்தின்படி வடக்கு அதிவேக பாதைக்கு மூன்று மருங்குகளை அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது.

திட்டத்துக்கான நிதியை குறைத்துள்ளதாக காட்டுவதற்காகவே இந்த வீதி மருங்கு குறைக்கப்பட்டுள்ளது. எனினும் முன்னைய அரசாங்கம், வீதிப் போக்குவரத்து நெரி சலை குறைப்பதற்காக மருங்குகளை அதிகரிக்க திட்டமிட்டிருந்தது.

இதேவேளை முன்னர் குற்றம் சுமத்திய அதே நிறுவனங்களிடமே தற்போதைய அரசாங்கம் வடக்கு அதிவேக வீதி அமைப்பு பணிகளை கையளித்துள்ளதாகவும் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

# பிரத்தியேக வகுப்புக்கள் 29 முதல் தடை

வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு பிரத்தியேக வகுப்புக்கள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றை நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 29 ஆம் திகதி நள்ளிரவு முதல் இந்த தடை அமுலாகும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனுடன் பரீட்சைக்கான மாதிரி வினாக்கள் மற்றும் விடைகள் அச்சிடுதல் மற்றும் அவற்றை விநியோகித்தல் கையேடுகள் அச்சிடுதல் மற்றும் அதனை விநியோகித்தல் போன்றவற்றிற்கும் முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தேசிய பாதுகாப்பு விடயங்களே வடக்கில் படைக்குறைப்பை தீர்மானிக்கும் என்கிறது இராணுவம்

வடமாகாணத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தமது செயற்பாடுகள் இடம்பெறுவதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேற்றப்படும் மக்கள் தொடர்புபட்ட நிலக்கண்ணி வெடி அகற்றல், நிர்மாணப் பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளையே இலங்கை இராணுவம் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவப் பிரச்சன்னத்தின் நிலை குறித்து இந்து அனுப்பிய கேள்வியொன்றுக்கு பதில் அளிக்கையிலேயே இலங்கை இராணுவம் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளது.

ஏறத்தாழ முழுமையாக இராணுவ் நடவடிக்கைகள் அல்லாத செயற்பாடுகளிலேயே தாம் ஈடுபட்டுள்ளதாக இராணுவம் கூறியுள்ளது.

2009 ஆம் ஆண்டு மனிதாபிமான நடவடிக்கை முடிவுக்கு வந்த் பின்னர் வட பகுதியிலுள்ள முகாம்களை மூடுவது தொடர்பில் இந்து கேள்வியொன்றை எழுப்பியுள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள இராணுவம், அச்சுறுத்தல் அளவு, தேசிய பாதுகாப்பிற்கு கவலையை ஏற்படுத்தும் விடயங்கள் மற்றும் தந்திரோபாய தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிலைநிறுத்தப்பட்டுள்ள படையினர் குறித்து தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுவதாக கூறியுள்ளது.

வடமாகாணத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள படையினரின் எண்ணிக்கை பல தடவைகள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

வடமாகாணத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள படையினர் மற்றும் முகாம்களின் எண்ணிக்கையை தேசிய பாதுகாப்புக்கு கவலையை ஏற்படுத்தும் விடயங்களே தீர்மானிக்கும் எனவும், 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் வடமாகாணத்தில் இருந்த 59 முகாம்கள் அகற்றப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் கடந்த மாதம் தகவல் வெளியிடப்பட்டிருந்ததாகவும் இந்து மேலும் கூறியுள்ளது.

## ஜனாதிபதி இன்று மாலைதீவிற்கு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று மாலைதீவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். மாலைதீவின் தேசிய சுதந்திர நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொளள வுள்ளார்.

ஜனாதிபதி இந்தப் பயணத்தின் போது, மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமின் அப்துல்லா கயூமுடன் பேச்சுக்களையும் நடத்தவுள்ளார். அத்துடன் மாலைதீவின் உயர் மட்ட அதிகாரிகளையும் சந்தித்து அவர் பேச்சு நடத்துவார்.

நாளைய தினம் ஜனாதிபதி நாடு திரும்புவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்ற பின்னர், சார்க் நாடுகளில் ஒன்றான மாலைதீவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

## ஜனநாயக...

இல்லை. இதுவரை காலமும் போரால் ஏற்பட்ட வடுக்களை தீர்ப்பதற்கான எந்த நடவடிக்கையும் இதயசுத்தியுடன் மேற்கொள்ளப்படவுமில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல், அரசியல் கைதிகள் இருந்தால்தான் திறம்பட நடக்கும் என்று இருக்கிறது. இதை ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வெளிநாட்டில் கூட போய் சொல்லியிருக்கிறார். இது மாற்றப்படவேண்டும்.

கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறி தமக்கு ஒருமித்து வாக்களிக்க சொல்கிறார்கள். அவ்வாறு 2 தேர்தல்களில் மக்களும் வாக்களித்தனர். ஆனால் எதனை இவர்கள் செய்தார்கள். இவர்களிடம் ஒற்றுமை இருக்கிறதா? இல்லை. அவர்களுக்குள்ளேயே முரண்பாடு.

போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் போராளிகளை ஜனநாயக நீரோட்டத்தில் இணைத்தால்தான் பிரச்சினை முற்றுமுழுதாக தீர்க்கப்படும். அவ்வாறு 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் செய்யவேண்டிய பொறுப்பு கூட்டமைப்பினருக்கு இருந்தது. ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. இதனால் நாம் முன்வந்து அவர்களிடம் இடம் கேட்டோம். ஆனால் விடுதலைப் புலிகளால் கூட்டிணைக்கப்பட்ட கூட்டமைப்பினரால் விடுதலைப் புலிகளான நாம் நிராகரிக்கப்பட்டோம். அவமானப்படுத்தப்பட்டோம். இதனால்தான் தனித்து இன்று தேர்தலில் இறங்கியுள்ளோம்.

வடமாகாண சபைத் தேர்தலில் எமக்கு சந்தர்ப்பம் வழங்கவுமில்லை. இதில் கிடைத்த மேலதிக ஆசனங்களையாவது எமது போராளிகளுக்கு வழங்கியிருக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நாம் நிராகரிக்கப்பட்டோம். இன்று இளைஞர், யுவதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்காகவே நாம் களமிறங்கியுள்ளோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இச்செய்தியாளர் சந்திப்பில் வேட்பாளர்கள் துளசி, கதிர், வேந்தன், ரவிராஜ், ரவி, சாள்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)

## மக்கள்...

ஏற்பட்டுள்ளது. நடைமுறைச் சாத்தியமாகாத விடயங்களையும், பொய்யான வாக்குறுதிகளையும் தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கி வெற்றி பெற்ற கூட்டமைப்பினர் இதுவரையில் மக்களுக்கான சேவைகள் எதனையும் செய்யவில்லை.

ஆனால் நாம் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளுக்கு அமைவாக மக்கள் நலன்சார்ந்த பல்வேறு செயற்திட்டங்களை செயற்படுத்திக் காட்டியுள்ளோம்.

ஜனநாயக வழிமுறை ஊடாகத்தான் எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்பதையே நாம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற எமது கட்சியின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாகவே நாம் தொடர்ந்தும் எமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதுமட்டுமன்றி 13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்பதை வலியுறுத்தும் எமது நிலைப்பாட்டைத்தான் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளும் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் எமக்குக் கிடைக்கப்பெற்ற அரசியல் பலத்தின் ஊடாகவும், அரசுடனான நல்லுறவின் ஊடாகவும் மக்கள் நலன்சார்ந்த பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக இருந்தது எனவும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் வெற்றிக்காக அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் எனவும், அப்போதுதான் எமது இலக்கை நாம் இலகுவாக எட்ட முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) உடனிருந்தார்.

## தேர்தல்...

கிளிநொச்சி பொதுச்சந்தை உட்பட்ட பகுதிகளில் பிரசாரத்தை மேற்கொள்ளும் வகையில் துண்டுப்பிரசுரங்களை வழங்கியதனால் இந்த இடங்களுக்கு வருகைதந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பால்மாவிற்கான...

பட்டுவந்த 135 ரூபா வரித் தொகை தற்பொழுது 180 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இது இவ்வாறிருப்பினும், கடந்த தினங்களில் உலக சந்தையில் பால்மாவின் விலை ஓரளவு குறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேசமே...

மத்தியில் அதிகாரம் குவிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் முகவராக ஆளுநரே உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் நாகரிக நடைமுறைகளுக்கு எதிராக தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

இந்த மக்கள் தமது பூர்வீக காணிகளில் குடியமர்த்தப்படுவார்கள் என சர்வதேச சமூகத்திற்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

நாம் எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள் தொடர்பிலும், எமக்குரிய எமது ஒருமித்த உரிமைகள் தொடர்பிலும், மேலும் எமது தலைவிதியை அல்லது எதிர்காலத்தை நாமே தீர்மானிப்பதற்கு எமக்கிருக்கும் உரிமை தொடர்பிலும் அதை உறுதிப்படுத்த ஒன்றுபட்டதும், பிளவுபடாததுமான இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கில் தக்க தன்னாட்சி முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

தமிழ் மக்கள் உள்ளூர் பொறிமுறைகளினூடாகத் தமது தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியுதுமானதொரு தீர்வினைப் பெற்றுக்கொள்ள அர்ப்பணிப்புடனே இருந்து வந்துள்ளனர்.

எனினும் இலங்கை அரசே கிட்டிய சந்தர்ப்பங்களையெல்லாம் உதறித் தள்ளியது மாத்திரமல்லாமல் தொடர்ச்சியாக இலங்கைத் தமிழர் மீது இன அழிப்பைக் கட்டவிழ்ப்பதன் ஊடாக அடக்கி ஆளத் தலைப்பட்டது.

இலங்கை அரசின் இந்த நிலைப்பாடே தேசிய இனப் பிரச்சினையை சர்வதேச மயமாக்கியதோடு சர்வதேச வகிபாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தையும் இலங்கை அரசிற்கு ஏற்படுத்தியதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# உள்ளக விசாரணைப் பொறிமுறை தெளிவுபடுத்த வேண்டும் அரசு

## வலியுறுத்தும் பீரிஸ்



(கொழும்பு)

போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக் களை விசாரணை செய்ய உள் நாட்டுப் பொறிமுறை அமைக்கப் படும் என கூறப்பட்டுள்ள போதி லும் அந்த பொறிமுறை எவ் வாறு அமையும் என்பது குறித்து அரசாங்கம் இதுவரை தெளிவு படுத்தவில்லை என எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் உரை யாற்றிய முன்னாள் வெளிவிவ கார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனீவாவில் கூடவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேர வையில் இலங்கைக்கு எதிரான விசாரணை அறிக்கை சமர்ப்பிக் கப்படவுள்ளதை அறிவோம்.

இதற்கு முன்னர் இலங்கை க்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்ய தெற்கென உள்நாட்டுப் பொறி முறை ஒன்று அமைக்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்தி ருந்தது.

எனினும் இன்று வரை எந்த வகையான பொறிமுறை உரு வாக்கப்படும் என்பதை அரசாங் கம் தெளிவுபடுத்தவில்லை. ஆகவே அது குறித்த தெளிவூட் டல் வேண்டும்.

அதேபோன்று, ஐ.நா.வின் ஆலோசனைக் குழு தலைமை யின் கீழ் இந்த உள்நாட்டு விசா ரணை இடம்பெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அண்மையில் பகிரங்க மாகவே தெரிவித்திருந்தார்.

அத்துடன் உள்நாட்டு பொறி முறையானது வெறும் நிகழ்ச்சி நிரலாக மட்டுமே காணப்படும் என்றும் அந்த உறுப்பினர் கூறியி ருந்தார்.

எனவே இது குறித்த தெளிவூட்டலையும் அரசாங்கம் எமக்கு வழங்க வேண்டும் என்றார்.

# ஐ.எஸ். பயங்கரவாதியின் குடும்பம் பாகிஸ்தானில்

சிரியாவுக்கு எதிராக யுத்தம் செய்து கொண்டிருக்கும்போது விமானத் தாக்குதலில் கொலை செய்யப்பட்ட ஐ.எஸ். பயங்கரவாத உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் கலகெதரவை சேர்ந்த அபு சுரைய் செய்லான் (வயது - 37) என்பவரின் குடும்ப உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் ருந்து தெரியவந்துள்ளது.

இவரின் குடும்ப உறுப்பினர்களை உடன் கைது செய்து விசா ரணை நடாத்துமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.


இதனையடுத்து, விசேட பொலிஸ் குழுவொன்று இவர் குடியி ருப்பதாக கூறப்படும் கலகெதர பிரதேசத்தில் சுற்றிவளைப்புக்களை முன்னெடுத்தது.

பல வருடங்களுக்கு முன்னர் குறித்த நபரின் மனைவி உட்பட குடும்ப உறுப்பினர்கள் பாகிஸ்தான் சென்றுள்ளதாக இவ்விசார ணைகளின் பின்னர் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கலேவெல பிரதேசத்தில் சர்வதேச பாடசாலை யொன்றில் அதிபராக கடமையாற்றியுள்ளார். பின்னர் விடுமுறை பெற்று பாகிஸ்தான் சென்றுள்ளார்.

தற்பொழுது இவருடன் தொடர்புபட்டவர்கள் சகலரும் பொலிஸா ரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் நேற்றைய சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# தேர்தலில் கூட்டுச்சேர அதிகாரப் பகிர்வை மறக்காத ஹக்கீம்



(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு குறித்து பெரும்பான்மைக் கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்று அறிந் ததன் பின்னரே அந்தக் கட்சிக ளுடன் நாம் கூட்டணி அமைப் போம். தற்போது ஐக்கிய தேசி யக் கட்சியுடன் இணைந்துள் ளால், நாம் அதிகாரப் பகிர்வை மறக்கவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவ ரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளி யீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

அதிகாரப் பகிர்வு குறித்து பெரும்பான்மைக் கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்று அறி ந்தே சிறுபான்மைக் கட்சிகள் அவற் றுடன் இணையும். இன்று நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளோம் ஆனால், அதி காரப் பகிர்வு குறித்து பேச வில்லை. சம்பிக்க வந்ததால் இந்த மாற்றம் இடம்பெறவில்லை. சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு தேவை. சமய சுதந் திரம் தேவை. நல்லிணக்கம் தேவை. இதை நாம் மறக்க வில்லை. நாட்டில் ஜனநாயகம் இருக்க வேண்டும். அதைப்பற்றி விவாதிக்க இடமிருக்க வேண் டும். நாடு காட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டு சக்திகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது எனப் பிரசாரம் செய்கின்றனர். அது இனி எடுபடாது. மக்களிடம் செல லாது. இது பொய்ப் பிரசாரம். தம்மை ஏமாற்றும் பிரசாரம் என்பதை மக்கள் அறிந்துள்ள னர்.

2005 ஆம் ஆண்டு புலிகளு டன் மகிந்த ஒப்பந்தம் செய்தி ருக்காவிட்டால், ரணில் விக்ரம சிங்கதான் அன்று ஜனாதிபதியா கியிருப்பார். நாட்டில் நல்லிணக் கம், சமாதானம் சூழலே எமக்குத் தேவை.

வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவரக்கூடிய சமூக, பொருளாதார முறைமை உரு வாக்கப்பட வேண்டும். அதை ரணில் விக்ரமசிங்கவால் மட்டுமே செய்ய முடியும். வேறு எவரா லும் முடியாது என்றார்.

# உயர்மட்ட விசாரணைக்குள் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் நிர்வாகத்தின் போது ஏற்பட்ட முறைகேடுகள் தொடர் பில் உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் நிர்வாகத் தின் போது நடந்த முறைகேடான கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் பொதுநலவாய நாடுகளின் விளை யாட்டுப் போட்டியை இலங்கை யில் நடத்த மேற்கொண்ட நடவ டிக்கை உட்பட பல்வேறு முறை கேடுகள் தொடர்பில் உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இந்த கொடுக்கல் வாங்கல் களை மேலோட்டமாக ஆராய்ந்த போது அதில் பாரிய முறைகேடு கள் இருப்பதாக தெரியவந்துள் ளது. இலங்கை மத்திய வங்கி யின் பொறுப்புக்கு அப்பால் சென்று இந்த கொடுக்கல் வாங் கல்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

ஹையாத் கொடுக்கல் வாங்கலில் இலங்கை மத்திய வங்கி 5 பில்லியன் ரூபாவை முதலீடு செய்தது, அது தற் போது இலங்கை அரசாங்கத்திற் கும் இந்திய நிறுவனம் ஒன்றுக் கும் இடையில் இழுபறியாக மாறியுள்ளது.

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநரும், மத்திய வங்கியின் நிதிச் சபையும் முதலீட்டு பரிந்து ரைகளை கவனத்தில் கொள் ளாது, ஊழியர் சேமலாப நிதியத் திற்குரிய பணத்தை இந்த முத லீட்டுக்காக பயன்படுத்தியுள்ள னர்.

இதனைத் தவிர பொதுநல வாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை இலங்கையில் நடத் தும் நோக்கில் பல போலி நிறு வனங்களை ஏற்படுத்தியுள்ளனர். பணத்தை திரட்டி செலவிடும் நோக்கில் மட்டுமே இந்த நிறு வனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந் தாக கூறப்படுகிறது.

# கட்சி உறுப்புரிமை நீக்கம் ஜனாதிபதியுடன் பேச்சு

## எச்சரிக்கும் அர்ஜுன

தான் உட்பட ஏனைய குழு வினரின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழு தீர்மா னம் எடுத்தால், அது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுடன் தான் கலந்துரையாடு வதாகவும், கட்சியின் தலைவர் குறித்து தமக்கு நம்பிக்கையுள்ள தாகவும் அமைச்சர் அர்ஜுன ரண துங்க தெரிவித்துள்ளார்.

எஸ்.பீ.நாவின்ன, ராஜித சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க, ஹிருணிகா ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயா ராகி வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது இது தொடர் பான தீர்மானம் எடுக்கப்படவுள் ளதாகவும் கூறப்படுகின்றது. இவர கள் ஐக்கிய தேசிய முன்னணி யுடன் இணைந்து கொண்டமைக் காகவே இந்தத் தீர்மானம் எடுக் கப்படவுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரி வித்த அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில்தான் இடம்பெற வேண்டும். இது வரையில் எமது கட்சி உறுப்புரிமை நீக்கப்படுவது தொடர்பில் எமக்கு எதுவித அறி விப்பும் செய்யப்படவில்லை.

ஊழல் பேர்வழிகளுடன் இருப் பதை விட விலகுவதும் ஒரு வகையில் சிறந்தது எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# இடமாற்றம்

(கொழும்பு)

குற்றவியல் விசாரணைகள் திணைக்களத்துக்குப் பொறுப் பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவீ செனவிரத்ன இடமாற்றம் செய்யப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் ருவன் குணசேகர தெரிவித் துள்ளார்.

சப்ரகமுவ மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கு பொறுப் பான பிரதிப் பொலிஸ் மா அதிப ராக இவர் நியமனம் செய்யப் பட்டுள்ளமையே இதற்கான கார ணம் என பொலிஸ் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேவையைக் கருத்தில் கொண்டு தேர்தல்கள் ஆணை யாளரின் அனுமதியுடன் இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ள தாகவும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# புத்திஜீவிகளின் வாக்குகளால் வெற்றி பெறுவார் மகிந்த

## நம்பிக்கை கொள்ளும் பந்துல

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புத்திஜீவிகளின் வாக் குகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெறுவிருப்ப தாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு உரை யாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டினுடைய பொருளாதா ரம் மற்றும் தேசிய பாதுகாப்பு என்பன இன்று கேள்விக்குறி யாகியிருப்பதாகவும் ஆளுமை மிக்க தலைமைத்துவமின்மையே இதற்கு காரணமெனவும் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் பொருளாதாரம் இன்று வீழ்ச்சி நோக்கியதாக சென்றுகொண்டிருப்பதாகவும் நிதியமைச்சர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் மீதும் நம் பிக்கையில்லாத நிலை தோன்றி யிருப்பதாகவும் அவர் ஊடகங் களுக்கு தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்கவினது ஆளுமையற்ற தலைமைத்துவத் தினூடாக பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப இயலாது என நிரூபித்துள்ளதாகவும், இதனால் பெரும் ஏமாற்றத்திலும் எதிர் காலம் தொடர்பிலான நம்பிக்கை யீனத்திலும் முதலீட்டாளர்கள் மற் றும் புத்திஜீவிகள் இருந்து வரு வதுடன் தமது ஆதரவுகளை தற் போது முன்னாள் ஜனாதிபதிக்கு தெரிவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.